ஜனவரி 2008 January | இதழ் 204 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION







Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

a monthly information digest

17 வது ஆண்டில் th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

**ஸ்தாபிதம்**
பெப்ரவரி 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**தொலைபேசி**
416 920 9250
**தொலைநகல்**
416 921 6576

**மின்னஞ்சல்**
tamilsinfo@sympatico.ca

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
ரஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

**பொது முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்

**விநியோக முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

# முயன்றால் முடியும்!

இந்த நூற்றாண்டின் முதல் ஏழு ஆண்டுகள் ஓடிவிட்டன. கால ஓட்டம் என்பது கண் மூடித் திறப்பது போலாகியுள்ளது. ‘மிலேனிய’ கொண்டாட்டங்கள் நேற்றுத்தான் நடந்தது மாதிரி எண்ணம். புத்தாயிரம் ஆண்டின் முதல் தசாப்தம் அடுத்த இரண்டு வருடங்களில் முடியப் போகின்றது. கனடியத் தமிழர் வாழ்வு கால் நூற்றாண்டில் பாதம் பதிக்கின்றது. 1983 ஆண்டு தமிழினப் படுகொலையை அடுத்து, அப்போது கனடியப் பிரதமராகவிருந்த பிறையன் மல்றோனி இந்நாட்டின் கதவுகளை ஈழத் தமிழர்களுக்காகத் திறந்து விட்டார். அவரது மனிதாபிமான நடவடிக்கை, சுமார் மூன்று லட்சம் எம்மவர்களுக்குக் கனடாவை இரண்டாவது தாயகமாக்கியது. இந்நாட்டின் சட்டம் ஒழுங்கு நீதி ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டு அவற்றை மதிப்பவர்களாக தமிழர்கள் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டதால், அனைத்து மட்டங்களிலும் மதிப்பினைப் பெற்றதாக தமிழினம் வளர்ச்சி கண்டுள்ளது. இருப்பினும், கனடிய அரசியலில் தகுதியான இடத்தினைப் பெறாதவரை தமிழன் குரல் எட்ட வேண்டிய இடங்களுக்குச் சென்றடையாது. இதனை நன்குணர்ந்ததால் கடந்த வருடத்தில் பல முன்னகர்வுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு கட்சிகளையும் சார்ந்த அரசியல்வாதிகளுடனான உறவாடல், தமிழர் பிரதான வைபவங்களில் சகல மட்ட, கட்சி அரசியல்வாதிகளும் பங்கேற்றமை, ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலில் உற்சாகத்துடன் பலர் போட்டியிட்டமை, பல்வேறு தேர்தல்களிலும் எம்மவரின் ஊக்கமான வாக்களிப்பு என்று இவைகளைப் பார்க்கலாம். தமிழர் எவரும் இத்தேர்தலில் வெற்றி பெறவில்லையாயினும், கணிசமான வாக்குகளைப் பெற்று, தத்தம் கட்சிகளின் பாராட்டைப் பெற்றுள்ளனர். அதேசமயம், வேட்பாளர் நியமனம் வழங்க விரும்பாதிருந்த கட்சிகளின் புருவங்களை உயர்த்தியுள்ளனர். இதன் காரணமாக அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் எதிர்வரும் வெவ்வேறு தேர்தல்களில் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை உணர ஆரம்பித்துள்ளனர். ஈழவிடுதலைப் போராட்டத்தின் உண்மைப் பின்னணியை அறிவதில் காட்டும் ஆர்வமும், தமிழர்களின் பிரச்சனைகளை அறிவதில் அக்கறை காட்டுவதும், தமிழ் மக்களால் வழங்கப்படும் மகஜர்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நியாயம் கோருவதும் கடந்த ஓரிரு மாதங்களில் ஏற்பட்ட சில முக்கிய மாற்றங்கள். இதனை ஒரு ஆரம்பமாகப் பார்த்து, தேர்தலை மையமாகக் கொள்ளாமல் இது தொடர வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். ஆத்ம சுத்தியோடு இந்நடவடிக்கையை மேற்கொள்வதாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. இங்குள்ள சகல அரசியற் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட குழு ஒன்றினை உடனடியாக உருவாக்க வேண்டும். பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இவ்வாறு உருவாக்கப்பட்ட குழு ஆற்றும் பணிகளை முன்னுதாரணமாகக் கொள்ளலாம். இந்தக் குழுவை அங்கு அமைப்பதில் பிரித்தானியத் தமிழர்களும், அவர்களின் அமைப்புகளும் சங்கங்களும் ஆற்றிய இடைவிடாத முயற்சியையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த ஆண்டின் எமது முக்கிய பணிகளில் ஒன்றாக அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு ஒன்றினைக் கனடாவில் உருவாக்க நாம் எல்லோரும் ஒன்றுபட்டு முயற்சித்தால் என்ன?

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

**Established**
February 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றொறன்ரோ மத்தி உட்பட நான்கு தொகுதிகளில் மார்ச் 17ல் இடைத்தேர்தல்

கனடாவின் நான்கு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 17ம் திகதி நடைபெறவுள்ளது. இவற்றுள் இரண்டு றொறன்ரோ பெருநகரத்திலும், ஒன்று வன்கூவரிலும், ஒன்று சச்கச்சுவான் வடக்கிலும் அமைந்துள்ளன.

றொறன்ரோ மத்திய தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும், லிபரல் அரசில் வெளிவிவகார அமைச்சராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் பணியாற்றிய பில் கிரஹாம் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றதால் இது காலியானது.

இங்கு மார்ச் 17ல் நடைபெறும் இடைத்தேர்தலில் லிபரல் அபேட்சகராக பொப் றேய் போட்டியிடுகின்றார். ஒன்ராறியோ என். டி. பியின் தலைவராக இவர் இருந்த வேளையில் மாகாண முதலமைச்சராகப் பதவி வகித்திருந்தார். அடுத்த மாகாண சபைத் தேர்தலில் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து என். டி. பியிலிருந்து வெளியேறிய பொப் றேய் லிபரல் கட்சியில் சேர்ந்தார். கடைசியாக நடைபெற்ற லிபரல் தலைமைப் போட்டியில் தோல்வியை இவர் தழுவ நேர்ந்தது. தற்போது நாடாளுமன்ற உறுப்பினரா வதற்காக கட்சியின் சார்பில் றொறன்ரோ மத்தியில் போட்டியிடுகின்றார்.

றொறன்ரோ பெருநகரின் மற்றொரு தொகுதியான விலோடேலில் மார்தா ஹோல் பின்ட்லே லிபரல் சார்பில் போட்டியிடுகிறார். இவரும் கடந்த கட்சித் தலைமைப்பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வி கண்டவர்.

மேற்படி இரண்டு தொகுதிகளும் ஏற்கனவே பல ஆண்டுகளாக லிபரல் கட்சி வசமிருந்ததால், இந்த இடைத் தேர்தலிலும் லிபரலே இங்கு இலகுவாக வெற்றி பெறுமென்று சகல அரசியற் கட்சிகளும் எதிர்பார்க்கின்றன.

வன்கூவரிலுள்ள குவாட்ரா தொகுதியில் லிபரலில் போட்டியிடும் ஜொய்ஸ் முறே வெற்றி பெறுவதற்கான சாத்தியமுண்டு. 1984 ஆண்டிலிருந்து இத்தொகுதியைத் தம்வசமாக வைத்திருப்பது இதற்கு முக்கிய காரணம். சச்கச்சுவானின் டெசம்ரே தொகுதிக்கு வேட்பாளரைத் தெரிவதில் லிபரல் உட்கட்சிப் போராட்டத்தை நடத்தி வருகின்றது.

கடந்த செப்டம்பரில் குவிபெக்கில் நடை பெற்ற மூன்று இடைத் தேர்தல்களிலும் படுதோல்வி கண்ட லிபரல் கட்சி, மார்ச் 17 இடைத்தேர்தல்களை ஒரு சவாலாகக் கருதுகின்றது.

## கனடாவின் ஐவரில் ஒருவர் வந்தேறு குடி - வெளிநாடொன்றில் பிறந்தவர் - றொறன்ரோ ஒரு 'வானவில்' நகரம்

## Canada - 1 in 5 foreign born; Toronto a rainbow city

கனடாவின் இன்றைய சனத்தொகையில் ஐவரில் ஒருவர் வந்தேறு குடி - அதாவது வெளிநாடொன்றில் பிறந்தவர். கனடாவில் செறிவாக மக்கள் வாழும் பெருநகரமான றொறன்ரோவின் சனத்தொகையில் ஐம்பது வீதமானவர்கள் வெளிநாடுகளில் பிறந்தவர்கள், அல்லது அவர்களது பரம்பரையினர். இதனால் றொறன்ரோவை 'ஒரு வானவில் நகரம்' என்று பிரபல ஆங்கில ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

கனடாவில் இறுதியாக நடைபெற்ற 2006 ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பு கடந்த மாதம் வெளியிடப்பட்டபோது மேற்சொன்ன விபரங்கள் தெரியவந்துள்ளன.

சுமார் இருநூறுக்கும் அதிகமான மொழிகளைப்பேசும் 220 வரையான இன மக்கள் கனடாவில் வாழுகின்றனர். இதனால் கனடாவை ஒரு பன்மைப் பண்பாட்டு நாடாக உலகம் பார்க்கின்றது. 'கனடா என்னும் நாட்டுக்குள் உலகம் அடங்கியுள்ளது' என்று பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் வர்ணித்துள்ளார்.

கனடாவில் வெளிநாட்டவர் குடியேற்றம் பெருகி வருவதால் இங்கு இனவிரோத நடவடிக்கைகள் அதிகரிக்கலாம் என்ற அச்சம் மேலோங்கி வருகின்றது. அண்மைய நாட்களில் ஆசிய மீனவர்களுக்கு எதிராக ஒன்ராறியோவில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சில தாக்குதல்களும், குவிபெக் மாகாணத்தில் முஸ்லிம் சமூகத்தவருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பரவலான நடவடிக்கைளும் இதற்கு உதாரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

2006 ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பு சுட்டியுள்ள சில முக்கிய விபரங்கள் வருமாறு:

* 1931 ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின் போது இந்நாட்டின் சனத்தொகையில் 13 வீதமானவர்களே வெளிநாடுகளில் பிறந்தவர்களாக இருந்தனர். ஆனால் இப்போது இருபது வீதத்தை எட்டிப் பிடித்துள்ளது.

* வெளிநாடுகளில் பிறந்து இங்கு குடியேறியவர்களில் ஏறத்தாழ ஐம்பது வீதமானவர்கள் கனடாவின் மூன்று நகரங்களிலேயே வாழுகின்றனர். றொறன்ரோ, வன்கூவர், மொன்றியல் ஆகிய மூன்றுமே இந்த நகரங்கள்.


* கனடாவின் புதிய குடிவரவாளர்களில் ஆகக்கூடியவர்களாக முதலிடத்தில் நிற்பவர்கள் சீன நாட்டினர். கனடிய சனத்தொகையில் இவர்கள் 15 வீதத்தினர். இந்தியா (11.6 வீதம்), பிலிப்பைன்ஸ் (7 வீதம்), பாகிஸ்தான் (5.3 வீதம்) ஆகியன அடுத்த மூன்று இடங்களை வகிக்கின்றன.

* கனடாவில் குடியேறியிருப்பவர்களில் 41 வீதமானவர்கள் ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஐரோப்பிய பண்பாட்டுப் பரம்பரையினர் 37 வீதம். ஆனல், 1971 ஆண்டில் கனடாவில் குடியேறிய வெளிநாட்டவர்களில் ஐரோப்பியர் 61 வீதமாக இருந்தனர்.

* 2001 ஆண்டுக்கும் 2006 ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் 1.1 மில்லியன் வெளிநாட்டவர் இங்கு குடியேறியுள்ளனர் இவர்கள் இருநூறு நாடுகளைச் சேர்ந்தவர்கள். இது பன்மைப் பண்பாட்டுக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளது.

* ஒருவர் வாழும் காலம் (ஆயுட் காலம்) கனடாவில் அதிகரித்துச் செல்கின்றது. மறுபுறத்தில் இயற்கைச் சனத்தொகை, அதாவது பிள்ளை பிறப்பு வீதம் மருகிச் செல்கின்றது. இந்நிலை தொடருமானால் 2030 ஆண்டளவில் கனடிய சனத்தொகை அதிகரிப்புக்கு வெளிநாட்டவர் வருகையையே முற்றாக நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

* கனடாவின் மொத்தச் சனத்தொகையில் 17.4 வீதத்தினர் மட்டுமே இந்நாட்டின் உத்தியோகபூர்வ மொழிகளான ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் உரையாடக் கூடியவர்களாக உள்ளனர். 11.9 வீதத்துக்கும் அதிகமானவர்கள், இவ்விரு மொழிகளைத் தவிர வேறு மொழிகளைப் பேசும் ஆற்றல் உள்ளவர்கள்.



செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாள்-வாரம்-மாதம் நாட்காட்டியின் வரலாறு

எஸ்.ஆர். ராஜபாலன்

காலத்தை கணக்கிடுவதற்கு உதவும் கலண்டர்கள் எமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டுள்ளன. இறைவனை வழிபடுதல், அன்றாடம் வேலைக்குச் செல்லுதல், முக்கியமான தினங்களைக் கொண்டாடுதல் என்பவற்றிற்கு பல்வேறு சந்ததிகளாக நாட்காட்டி எமக்கு உதவியாக இருந்து வருகின்றன.

சந்திரனில ஏற்படும் மாறுதல்களால் உருவாகும் அமாவாசை, பௌர்ணமி என்பவற்றையும், சூரியனின் நகர்வினால் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆதிமனிதர்கள் காலத்தைக் கணக்கிட்டனர். ஆனால் காலப்போக்கில் பல நூற்றாண்டுகளாக பல்வேறு சமுதாயங்களில் நாகரிக வளர்ச்சி ஏற்பட்டு கணக்கீட்டு முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகவே தற்போது நடைமுறையில் உள்ள நாட்காட்டி உருவாகியது.

லத்தீன் மொழியில், பதிவேடு (Ledger) அல்லது கணக்கு புத்தகம் என்ற பொருள்படும் கலேண்ட்ஸ் (Kalends) என்ற வார்த்தையில் இருந்தே கலண்டர் என்ற சொல் தோன்றியது.

வெவ்வேறு கால கட்டங்களில் அநேக அறிஞர்கள், வானசாஸ்திர நிபுணர்கள் ஆகியோரால் பல்வேறு மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னரே தற்போதைய கிறகேரியன் நாட்காட்டி உருவாகியது.

ஏழு நாட்களையுடைய வாரங்களைக் கொண்ட தற்போதைய நவீன மயப்படுத்தப்பட்ட கிறகெறியன் (Gregarian) முறைக் கலண்டரின் உதவியினால் நாம் காலத்தை சரியான முறையில் கணித்து அளவிட முடிகிறது.

### கிறகேறியன் நாட்காட்டி தோன்றிய வரலாறு

கிறிஸ்துவிற்கு முன்பு 2500 ஆண்டளவில் எகிப்தியர்களால் முதல் நாட்காட்டி உருவாக்கப்பட்டது என பொதுவாக நம்பப்படுகிறது. அதன் பின்பு கி.மு 713 ஆண்டில் றோம் சாம்ராஜ்யத்தின் 2வது அரசன் நூமா பொம்புலியஸ் (Numa Pompilius) என்பவர் ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களை பழைய நாட்காட்டியில் இணைத்தார். இதுவே றோமன் குடியரசின் நாட்காட்டியாக உருவாகியது.

அதன் பின் கி.மு. 46 ஆண்டில் யூலியஸ் சீசர் அரசனால் றோமன் நாட்காட்டியின் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

யூலியன் கலண்டர் (Julian Calendar) என அழைக்கப்பட்ட இக் கலண்டர் ஏறக்குறைய 15 நூற்றாண்டுகளாக மேற்குலக நாடுகளிலும் ஐரோப்பாவிலும் நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் 1582 ஆண்டில் பாப்பரசர் 13வது கிறெகெறி என்பவரின் ஆணைப்படி யூலியன் கலண்டரில் மாற்றங்கள் செய்யப்பட்டு தற்போது உலகெங்கும் பாவனையில் உள்ள கிறகேறியன் நாட்காட்டி உருவாக்கப்பட்டது.

### ஒரு நாள் என்பதனை வரையிறுத்தல்

நள்ளிரவில் தொடங்கி மறுநாள் நள்ளிரவு வரையான காலப்பகுதியை நாம் ஒரு நாள் எனக் கணக்கிடுகிறோம். ஆனால் வானியல் நிபுணர்களின் கருத்துப்படி கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் மத்திய இத்தாலியில் உம்பீரியன்ஸ் (Umbrians) எனப்படும் இனத்தவர்கள் நண்பகலில் இருந்து மறுநாள் நண்பகல் வரையிலான காலப்பகுதியை ஒரு நாள் எனக் கணக்கிட்டு வந்தனர். கீபுறூ (Hebrew) இனத்தவர்கள் சூரிய அஸ்தமனத்தில் இருந்து அடுத்த நாள் எனக் கொண்டனர். அதேவேளை புரதான பபிலோனியரும், எகிப்தியர்களும், சீனர்களும் இந்துமதக் குருக்களும் சூரிய உதயம் முதல் அடுத்த சூரிய உதயம் வரையான காலத்தை ஒருநாள் எனக் கணக்கிட்டனர். எனவே ஒரு நாள் என்பது ஒரு பகல் காலத்தையும், இரவுக் காலத்தையும் உள்ளடக்குகின்றது என்பதில் கருத்து ஒற்றுமை நிலவி வந்தபோதும் அதனை எவ்வாறு கணக்கிடுவது என்பதில் புரதான சமூகங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டு வந்தன.

ஏழு நாட்களைக் கொண்ட வாரம் உருவாகியமை

முதலாம் நூற்றாண்டில் யூத இனத்தவர்களால் 7 நாட்களைக் கொண்ட ஒரு வாரம் (7 Day week) என்ற கால அளவீடு அறிமுகப்படுத்தப்பட்டு அந்த முறை கிரேக்கர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சந்திரனின் நான்கு வெவ்வேறுபட்ட வளர்ச்சிக் கட்டங்கள் (4 Phases of Moon) ஒவ்வொன்றும் 7 நாட்கள் என்பதனாலும் பபிலோனிய மக்களின் புனித எண் 7 என்பதனாலும் ஒரு வாரத்தில் 7 நாட்கள் எனக் கணக்கீடு செய்ததாக நம்பப்படுகிறது. அதேசமயம் ஏழு கிரகங்களைக் குறிக்கும் கடவுள்களின் லத்தீன் மொழி, ஸ்கந்திநேவிய மொழி பெயர்களும் மருவி வாரத்தின் ஏழு நாட்களின் பெயர்கள் உருவாகின.

### மாதங்களின் பெயர்கள் தோன்றியமை

ஒரு வருடத்தின் 12 மாதங்கள் சந்திரனின் வளர்ச்சிச் சக்கரத்தைக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளன. அவற்றில் பல லத்தீன் மொழியில் இருந்து தோன்றின. செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் என்ற பெயர்கள் லத்தீன் மொழியில் 7, 8, 9, 10 என்ற எண்களைக் குறிக்கும் வார்த்தைகளில் இருந்து உருவாக்கப்பட்டன. யூலை, ஆகஸ்ட் என்பன ரோமன் அரசர்களான யூலியன் சீசர் ஆகியோரின் பெயர்களில் இருந்து பெறப்பட்டன. ஜனவரி, யூன் ஆகிய மாதங்கள் கிரேக்க கடவுள்களான ஜானுஸ் (Janus) யூனோ (Juno) என்பவற்றில் இருந்து உருவாக்கப்பட்டன எனக் கருதப்படுகிறது. செவ்வாய் (Mars) என்னும் கடவுள் பெயரில் இருந்து மார்ச் மாதம் என்ற பெயர் ஏற்படுத்தப்பட்டது எனக் கூறப்படுகின்றது. பழைய காலத்தில் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட ஓர் காலப் பகுதியில் புனிதப்படுத்தும் சடங்குகள் நிறைவேற்றப்பட்டு வந்தன. அந்த நிகழ்வுகளைக் குறிக்கும் பெப்ரவரே (Februare) என்னும் சொல்லில் இருந்து பெருவரேரியஸ் என்று உருவாகிய வார்த்தை ஆங்கில மயப்படுத்தப்பட்டு பெப்ரவரி என்ற மாதம் பெயரிடப்பட்டது. ஏப்ரல், மே ஆகிய மாதங்கள் எவ்வாறு பெயர் பெற்றன என்பது குறித்து சரியான ஆதாரங்கள் எதுவும் சரித்திரப் பதிவேடுகளில் குறிப்பிடப்படவில்லை.

றோமன் - கிறகேறிய கலண்டர்களில் நாட்கள் எண்ணிக்கை மாற்றம் அடைந்த வரலாறு

கலண்டரின் பெயர்
றோமியுலஸ் (Romulus) கி.மு. 738
நூமா (Numa) கி.மு 713
யூமியஸ் (Julius) கி.மு. 47
ஆகஸ்துஸ் (Augustus) கி.மு. 8
கிறெகெறி (Gregory) கி.மு. 1582

வருடத்தின் நாட்களின் எண்ணிக்கை 303 355 365 365 365

1. றோம் சாம்ராஜ்யத்தின் ஆரம்பகாலத்தில் சந்திரனின் வளர்ச்சி மாற்றத்தின் அடிப்படையில் 10 மாதங்களை உடையதும் 303 நாட்களைக் கொண்டதான வருடமே உபயோகத்தில் இருந்தது.

2. ஆனால் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலேயே ஒரு வருடத்தில் 12 மாதங்கள் என்னும் முறை உருவாக்கப்பட்டது. றோம் நகரின் 2வது (31ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடியத் தமிழர் வாழ்வு

# புகலிட அகதி வாழ்க்கையின் முதலாவது கால் நூற்றாண்டு

ஈழத்தமிழரின் புலப்பெயர்வு வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு அடிப்படையில் அமைந்துள்ளது. முன்னைய காலங்களில், சிங்கப்பூர் மற்றும் பர்மா போன்ற ஆசிய நாடுகளுக்கு வேலை நிமித்தம் நம்மவர்கள் சென்றனர். இவர்களின் ஒரு பரம்பரையினர் இப்போதும் சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

பின்னர் உயர்கல்வி நோக்கி வசதியான குடும்பப் பிள்ளைகள் மேற்குலகுக்குப் பயணமாகினர். கணிசமானோர் பிரிட்டன் சென்றனர். இரு நாட்டு கல்வி முறைமையும் ஒன்றாக இருந்ததாலும், பிரித்தானிய ஆங்கில மொழி பரிச்சயமானதாக அமைந்ததாலும் இது வசதியாக அமைந்தது.

இவர்களில் ஒரு பகுதியினர் பட்டம் பெற்ற பின்னர் தொழில் நாடி வேறு நாடுகளுக்குப் பயணமாகினர். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகியவை இதில் முக்கியமானவை,

ஆனால், 1983 ஆண்டு ஈழத்தமிழர் புலப்பெயர்வில் ஒரு வரலாற்று வருடமாக மாறியது. சிறீலங்காவின் சிங்கள அரசு தனது ராணுவ மற்றும் காடையர் உதவியுடன் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட இனவெறித் தாக்குதல், 1958 ஆண்டை நினைவு கூர வைத்தது.

கோரத்தாக்குதல், பகற்கொள்ளை, வீடெரிப்பு, சொத்துச் சூறையாடல், கற்பழிப்பு, படுகொலை என்பன வகைதொகையின்றி தென்னிலங்கையில் நிகழ்ந்தேறியது.

1958 மே மாத பிற்பகுதியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் வவுனியா மகாநாட்டைத் தொடர்ந்து, அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் முதலாவது இனவெறித் தாக்குதல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1983ல் நாட்டின் தலைவராகவிருந்த ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் தலைமையிலும் வழிநடத்தலிலும் இரண்டாவது இனவெறித் தாக்குதல் யூலை மாதத்தில் நடத்தப்பட்டது. இந்த நடவடிக்கையானது முன்னையது போலன்றி உலகின் கவனத்தை ஸ்ரீலங்காவின் பக்கம் திரும்ப வைத்தது.

முக்கியமாக, இந்தியாவின் அப்போதைய பிரதமராகவிருந்த இந்திரா காந்தி உடனடி நடவடிக்கை எடுத்து, அகதி முகாம்களிலிருந்த தமிழர்களை அவர்களது தாயக பூமியான தமிழீழத்துக்கு அனுப்பி வைக்க கப்பல்களைக் கொடுத்துதவினார். தமது வெளியுறவு அமைச்சராகவிருந்த பி. நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பி, அரசியல் தீர்வுக்கான பேச்சுகளையும் ஆரம்பித்தார்.

மறுபுறத்தில் சில மேற்கு நாடுகளும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவ முன்வந்தன. இந்த உதவியானது பல்வகையானதாக அமைந்திருந்தது. பொருளுதவி, நிதியுதவி என்பதனைவிட புகலிட வசதி முக்கியமானது. இந்த இடத்தில் கனடா துருவமாக மிளிர்கின்றது. அப்போது கனடாவில் வாழ்ந்து வந்த தமிழன்பர்கள் சிலர் ஒன்று கூடி (இவர்களுள் திருவாளர்கள் நா. சிவலிங்கம், அருள் எஸ். அருளையா, சிறீகுகன் சிறீஸ்கந்தராசா ஆகியோர் முன்னணியில் நின்றவர்கள்) கனடிய மத்திய அரசின் உயர் மட்டத்தைச் சந்தித்து சில ஆக்கபூர்வமான நடவடிக்கைளை ஆரம்பித்தனர்.

திரு. பிறையன் மல்றோனி தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி அப்போது கனடாவை ஆட்சி புரிந்து வந்தது. தற்போது ஆட்சி புரிகின்ற ஸ்ரீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் மல்றோனியின் கன்சர்வேடிவ்விலிருந்து வேறுபட்டது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். சிறீலங்காவில் தமிழர்கள் தாக்கப்பட்ட, கொல்லப்பட்ட செயலைக் கண்டித்த மல்றோனி அரசு அவர்களுக்கு உதவிட முன்வந்தது. கனடியத் தமிழன்பர்கள் எடுத்த முயற்சி கைமேல் பலனளித்தது.

கனடிய குடிவரவுச் சட்டத்தில் விசேஷ செயற்திட்டம் (special program) கொண்டுவரப்பட்டு, ஈழத்தமிழ் அகதிகள் கனடாவில் குடியேற அனுமதி வழங்கப்பட்டது. ஏற்கனவே கனடாவில் வாழ்ந்து வந்த எவரும் தமது சொந்த பந்தங்களைக் கனடாவில் அழைக்க இது வாய்ப்பை ஏற்படுத்தியது.

1983ல் தமிழர் இனவழிப்பையடுத்து அவர்கள் குடியேறக் கதவுகளைத் திறந்துவிட்ட முதலாவது நாடு கனடா என்ற பெருமைச் சிறப்பு வரலாற்றுப் பதிவுக்குரியது. அதற்கு வழியமைத்த பிறையன் மல்றோனி அவர்களைக் கனடியத் தமிழர் என்றும் நன்றியுடன் நினைவுப் பெட்டகத்தில் வைத்திருப்பர்.

கனடாவையடுத்து, ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்கா ஆஸ்திரேலியா நாடுகளும் அகதிகளை ஏற்றுக் கொள்ளும் ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, ஈழத்தமிழர்களுக்குப் புகலிடம் அளிக்க ஆரம்பித்தன.

இன்று சுமார் எட்டு லட்சத்துக்கும் அதிகமான நம்மவர்கள் உலகப் பந்தின் மூலைமுடுக்கெங்கும் சிதறி வாழுகின்றனர். இவர்களுள் அதிகமானவர்கள், சுமார் மூன்று லட்சம் பேர் கனடாவில் வாழ்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அதனால், இவர்கள் வாழ்வும் வளமும் பலராலும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றது.

கனடியத் தமிழர்கள் தமது புகலிட நாட்டில் ஒரு தனித்துவமான இனமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்குப் பல காரணங்களுண்டு. கால் நூற்றாண்டு என்னும் குறுகிய காலத்தில் கல்வி முன்னேற்றம், சமூகக் கட்டுமானம், இருப்பிட விஸ்தரிப்பு, தொழிற்றுறை மேம்பாடு, வணிகத் தொழிற்பாடு, பொதுவாழ்வின் ஈடுபாடு, தாயக உறவுகளின் தேவையை நிறைவேற்றுவதில் காட்டி வரும் ஆர்வம், தமிழ் மண்ணின் நீதியான விடுதலைப் போராட்டத்துக்குத் தார்மீக ஆதரவு வழங்குதல் போன்ற இன்னோரன்ன காரணிகள் இதன் பின்னணியிலுள்ளன.

அதேசமயம், தஞ்சம் கொடுத்த கனடிய அரசாங்கங்களுக்கும், பரிவும் கருணையும் காட்டிய - காட்டி வரும் இந்நாட்டு மக்களை மதித்து நடப்பதும், இந்நாட்டின் சட்டம் ஒழுங்கு ஆகியவைகளைப் பேணி வருவதும். கனடிய அரசியலில் காட்டி வரும் அதீத பங்களிப்பும் குறிப்பிடப்பட வேண்டிய அம்சங்கள்.

இவைகளை மையப்படுத்தியே கனடியத் தமிழர்களை இங்கு வாழும் மற்றைய இனக் குழுமங்கள் ஆழமாகவும் கூர்மையாகவும் அவதானித்து வருகின்றன. கனடிய அரச அமைப்புகளும், பாதுகாப்பு நிறுவனங்களும் இதன் வழியாகத் தமது பார்வையைச் செலுத்துகின்றன.

கனடியத் தமிழர்களின் கடந்து வந்த கால் நூற்றாண்டை மதிப்பீடு செய்யின், எதிர்காலப் பாதையைச் செப்பனிட வசதியாகவிருக்கும். இதனைச் செய்திட வேண்டிய பொறுப்பு முதலாம் பரம்பரையினருடன் இரண்டாம் பரம்பரையினையும் சார்ந்தது. தொழிற்றுறையில் பின்நவீனத்துவ வளர்ச்சி கண்டுள்ள இளைய தலைமுறைக்கு இதில் சிறப்புக் கடமையுண்டு.

கனடியத் தமிழர் தங்கள் புகலிட வாழ்வின் கால் நூற்றாண்டில் பாதம் பதிக்கின்ற இவ்வேளையில் கனடிய அரசுகளுக்கும் மக்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், கடந்து வந்த பாதையை ஆரோக்கியமாக உள்நோக்க ஆரம்பிப்பது சாலப் பொருத்தமானது.

**உக்கிரன் பார்வை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் புதிய தொடர் -01

# ஒரு சொல் பல பொருள் கோவை
# ENGLISH - தமிழ்

1. bank **account** = வங்கிக் கணக்கு
**Account** for your absence = நீ வரத் தவறியதற்கு விளக்கமளி
All passengers have been **accounted** for = பயணிகள் அனைவரையும் பற்றிய விபரங்கள் அறியப்பட்டுவிட்டன
an **account** of the incident = நிகழ்ந்த விவரம் = நிகழ்வரம்
by your own **account** = உங்கள் சொந்த விவரத்தின்படி = நீங்கள் முன்வைக்கும் விவரத்தின்படி
Call to **account** = விளக்கம் கேள்
Don't change your plan on my **account** = எனக்காக உன் திட்டத்தை மாற்றாதே
Give a good **account** of yourself = (1) உன்னைப் பற்றி ஒரு நல்ல எண்ணத்தை உண்டாக்கு
(2) வெற்றி பெறு
Don't give a bad **account** of yourself = (1) உன்னைப் பற்றி ஒரு கூடாத எண்ணத்தை உண்டாக்காதே
(2) தோல்வி அடையாதே
Hold to **account** = பொறுப்பாளியாக்கு
Keep **account** of your expenses = உனது செலவுகளைப் பதிந்து வைத்திரு
Leave out of **account** = கருத்தில் கொள்வதைத் தவிர்
matter of no/little **account** = முக்கியமற்ற விடயம்
matter of some **account** = ஓரளவு முக்கிய விடயம்
on **account** of ill-health = சுகயீனம் காரணமாக
On no **account** should you drink = நீ எக்காரணம் கொண்டும் குடிக்கக் கூடாது
Our anti-aircraft guns have **accounted** for five enemy bombers = எமது விமான எதிர்ப்புப் பீரங்கிகள் எதிரிகளின் ஐந்து குண்டுவீச்சு விமானங்களை அழித்துள்ளன
Put your influence to good **account** = உனது செல்வாக்கை நல்வழியில் பயன்படுத்து
settle **accounts** with = square **accounts** with = (1) கணக்குத் தீர் (2) பழி வாங்கு
Take experience into **account** = அனுபவத்தைக் கருத்தில் கொள்

2. **act** as an interpreter = ஒரு பேச்சு மொழிபெயர்ப்பாளராகச் செயற்படு
**act** dumb = வாய்பேசாதவர் போல் நடி
**act** like a child = ஒரு சிறுபிள்ளையைப் போல் நடந்துகொள்
**act** of God = கடவுள் செயல்
**act** of parliament = நாடாளுமன்றச் சட்டம்
**act** to stop violence = வன்முறையை நிறுத்த நடவடிக்கை எடு
**act** up = கூடா நடத்தையில் ஈடுபடு

3. **action** group = செயற் குழுமம்
**action** of sunlihgt on the skin = சூரிய ஒளி தோலில் ஏற்படுத்தும் தாக்கம்
**action** of the liver = ஈரலின் செயற்பாடு
**action** replay = (1) மீள்காட்சி (2) மீள்நிகழ்வு
**Action** speaks louder than words = சொல்லை விடச் செயலே தாக்கம் மிகுந்தது
**action** stations = சமராடு நிலைகள்
**action**-packed film = பரபரப்பூட்டும் திரைப்படம்
killed in **action** = களத்தில் கொல்லப்பட்ட = போரில் கொல்லப்பட்ட
out of **action** = இயக்கமற்ற

4. **active** imagination = ததும்பும் கற்பனை
**active** ingredient = (இரசாயன) தாக்கம் விளைவிக்கும் கூறு
**active** participation = முன்னின்று பங்குபற்றுகை
**active** seniors = சுறுசுறுப்பான முதியோர்
**active** service = போர்க்காலப் படைச்சேவை
**active** voice = செய்வினை
**active** volcano = கெம்பவல்ல எரிமலை

5. **address** a meeting = ஒரு கூட்டத்தில் உரையாற்று
**address** card = முகவரி அட்டை
**address** the needs = தேவைகளைக் கவனி
**address** your application to me = உன் விண்ணப்பத்தை எனக்கு அனுப்பு

6. **administer** a kick = ஓர் உதை கொடு
**administer** a school = ஒரு பாடசாலையை நிருவகி
**administer** justice = நீதியை நடைமுறைப்படுத்து
**administer** medicine = மருந்து கொடு
**administer** punishment = தண்டனை அளி

7. **advance** a new theory = ஒரு புதிய கோட்பாட்டை முன்வை
**advance** me the money = எனக்கு முன்கூட்டியே பணம் கொடு
**advance** one mile = ஒரு மைல் முன்னகரு
**advance** team = முன்னர் அணி
**advance** the cause of democracy = மக்களாட்சி என்னும் நன்னோக்கத்துக்குத் துணைநில்
**advance** voting = முன்கூட்டியே வாக்களித்தல்

8. **advances** in medical science = மருத்துவ இயல் முன்னேற்றங்கள்
**advances** of the enemy = எதிரியின் முன்னகர்வுகள்
make **advances** to someone = சிற்றின்ப நோக்குடன் ஒருவரை அணுகு

9. **advantage** of education = கல்வியின் பயன்
work to your **advantage** = உன் பயன் கருதிச் செயற்படு
take **advantage** of somebody = ஒருவரைப் பயன்படுத்து

10. Can we **afford** a new car? = எங்களுக்கு ஒரு புதிய கார் (வாங்கக்) கட்டுமா?
I can't **afford** to leave my family = என் குடும்பத்தை விட்டு அகல்வது எனக்குக் கட்டாது = நான் எனது குடும்பத்தை விட்டு அகல முடியாத நிலையில் இருக்கிறேன்
This plan **affords** us a chance = இத்திட்டம் எங்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கிறது

தொடர்ந்து வரும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார முரண்பாடுகளும் பிள்ளைகளும்
# Conflicts of Cultures and Children



**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா

அண்மையில் 16 வயது அக்ஸா பர்வீஸ் (Aqsa Parvez) என்ற மாணவியை தந்தையார் கொலை செய்த சம்பவம் கலாச்சார முரண்பாடுகளில் சிக்கித் தவிக்கும் எந்த ஒரு புலம்பெயர்ந்த இனத்திற்குமே சிந்தனைக்குரிய விடயமாகும். இஸ்லாமிய மதப் பெண்களுக்குரிய முக்காட்டை (ஹியாப் - Hijab) இப் பருவமங்கை அணிய மறுத்ததாகவும், கனடா நாட்டு பெண்பிள்ளைகளைப் போன்ற உடைகளை அணிந்ததாலுமே வீட்டில் சச்சரவு ஏற்பட்டதாக வெகுஜனத் தொடர்புகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே இஸ்லாமிய மதத்தவர்களை அமெரிக்காவின் 9/11 சம்பவத்திற்குப் பின்பு வேறு கண்களோடு பார்க்கும் சமூகத்திற்கு இச் சம்பவம் பெருவிருந்தாக அமைந்து விட்டது. வாழ வேண்டிய வயதில் வாழ்க்கையில் வசந்தங்கள் வீசும் பருவத்தில் அக்ஸாவின் துர்மரணம் விசனத்துக்குரியதே.

அதேசமயம் எட்டுக் குழந்தைகளின் தந்தை, 57 வயதினர், ஏற்கனவே இருதய நோயாளி, கடினமான உழைப்பாகிய டாக்ஸி ஓட்டுனர், எவ்வளவு கஷ்டப்பட்டு தனது பிள்ளைகளை வளர்த்திருப்பார் என்பது சொல்லித் தெரிய வேண்டியதொன்றில்லை. அக்ஸா கடைக்குட்டி, குடும்பமே அவள் மேல் பாசத்தைச் சொரிந்திருக்கும். திட்டமிட்டு எந்த ஒரு தந்தையும் பிள்ளையை கொலை செய்வதில்லை. பர்வீஸ் இக் கொலையைச் செய்தாரா, அல்லது யதேச்சையாக இத்துன்பகரமான நிகழ்ச்சி நடந்ததா என்பதனை காலமும், சட்டமும் தான் நிர்ணயிக்கும். இதனைப் பார்க்கும் பொழுது பருவத்தின் விளிம்பில் வாழ்க்கை துண்டிக்கப்பட்ட அக்ஸாவிற்காக அழுவதா, அன்னிய நாட்டில் சட்டத்தின் கையில் அகப்பட்டு திணறிக் கொண்டிருக்கும் தந்தைக்காகப் பரிதாபப்படுவதா, ஒருவராலும் ஆற்ற முடியாது அழுது புலம்பிக் கொண்டிருக்கும் தாயாருக்காக வருந்துவதா என எல்லோரும் ஆதங்கப்படுகிறார்கள்.

இந்தத் திடுக்கிடும் செய்தியை தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், அறிவித்ததுமே ஒரு பெரிய விவாத அரங்கு பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும், கணினி மையங்களிலும் உலகளாவிய ரீதியில் அரங்கேறத் தொடங்கி விட்டன. இது கலாசாரம் சம்பந்தமானதா, சமயம் சம்பந்தமானதா, குடும்ப வன்முறை சம்பந்தமானதா, தன்மானப் பிரச்சனையா இன்னோரன்ன வினாக்களை இவ்விவாதங்கள் எழுப்பியுள்ளன. Face Book இல் 11 குழுக்களைச் சார்ந்த 5,000 அங்கத்தவர்கள் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர். YouTube இல் 11 வீடியோ பிரதிகளை 16,000 மக்கள் பார்வையிட்டுள்ளனர். Somalinet.com என்ற கணினித் தளம் தகப்பனார் நடந்து கொண்ட விதம் சரியா, தவறா என வாக்கெடுப்பு தொடங்கியுள்ளது. ஆகவே இன்றைய கணினி யுகத்தில் எந்த ஒரு விடயமும் விவாதத்திற்கு உரிய விடயமாக விசுவரூபம் எடுத்து அது சம்பந்தப்பட்டவர்களை படாத-பாடு படுத்தி விடுகிறது. இத்தனைக்கும் தலையங்கியாகிய ஹியாபை அணிய அக்ஸா மறுத்ததாலேயே அவரை தந்தையார் துன்புறுத்தியதாகவும், இரு முறை அவர் வீட்டை விட்டு வெளியேறி வேறு குடும்பத்தோடு வாழ்ந்ததாகவும் இன்னோரன்ன தகவல்களை அவரின் சிநேகிதிகளே வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். ஆகவே உண்மையான காரணங்கள் வழக்கு விசாரணையின் போதுதான் தெரிய வரும். எது எப்படி இருந்தாலும் இரு கலா-சாரங்களுக்கிடையில் இருதலைக்கொள்ளி எறும்பாக வாழும் இன்றைய தலைமுறையினருக்கும், அண்மையில் புலம்பெயர்ந்து எவ்வாறு வளர்ந்த பிள்ளைகளை, அதிலும் வளர்ந்த பெண் பிள்ளைகளை கட்டுப்பாட்டோடு வளர்ப்பது என அங்கலாய்க்கும் பெற்றோருக்கும் இப் பரிதாபகரமான நிகழ்ச்சி ஒரு கண் திறப்பாகும் (eye opener).

புலம்பெயர்ந்த எல்லாச் சமூகத்தவர்களுமே பலவிதமான பிரச்சனைகளைச் சந்தித்து பின்புதான் தேசிய நீரோட்டத்தில் ஒன்றிணைந்தனர். கனடாவின் அதீதமான சுதந்திர வாழ்க்கைப் போக்குக்கும், புலம்பெயர்ந்த நாட்டு வாழ்க்கை விழுமியங்களுக்கும் இடையில் பிள்ளைகள் மாத்திரமன்றி பெற்றோரும் சிக்கித் தவித்தபடியே இருக்கிறார்கள். பெற்றோருக்கு பிள்ளை வளர்ப்பு ஒரு பெரிய சுமையாக இருக்கிறது. அதேசமயம் அவர்கள் தமது பொருளாதார நிலையை ஸ்திரமாக்க வேண்டிய சுமையையும் சுமக்க வேண்டியுள்ளது. ஆகவே பிள்ளைகள் தமது சொல்லுக்குக் கீழ்ப்படியாதவிடத்து, கோபமும் பொறுமையின்மையும், பயமும் ஏற்படத்தான் செய்யும்.

அத்துடன் நடை, உடை, பாவனையில் பிள்ளைகள் தான்தோன்றித்தனமாக நடக்கும் பொழுது, பெற்றோரின் பிள்ளை வளர்ப்பு சரியாக அமையவில்லை என தமது சமூகத்தவர் தம்மை எள்ளி நகையாடுவர் என்ற மனப் பயமும் பல பெற்றோரிடம் காணப்படுகிறது.

எமது சமூகத்தில் பிள்ளை வளர்ப்பை பெரும்பாலான பெற்றோர்கள் மிகவும் வெற்றிகரமாகக் கையாளுவதையே காணக் கூடியதாக உள்ளது. எவ்வளவோ வேலைப் பளுவுக்கிடையிலும் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக இரவு, பகலாகப் பெற்றோர் பாடுபடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. ஆயினும் ஒரு சில வீடுகளில் பிள்ளைகளின் நடவடிக்கைகளால் பாதிப்புகள் காணப்படத்தான் செய்கின்றன. ஒரு வயதுக்கு பிள்ளைகள் வளர்ந்த பின்பு பெற்றோர் தமது அதிகார ஸ்தானத்தை (authoritative position) கட்டாயமாக விட்டுக் கொடுக்க வேண்டும்.

சில பிள்ளைக் கட்டுப்பாட்டிற்குப் பயந்து அடங்கி ஒடுங்கி நடப்பார்கள். சில பிள்ளைகள் வீட்டில் அடங்கிப் போவது போல் பாசாங்கு செய்துவிட்டு பெற்றோர் அறியாதவாறு வெளியில் குழப்படி செய்வார்கள். வேறு சில துணிச்சலான பிள்ளைகள் எதிர்ப்பார்கள் (Rebellious children). எதிர்ப்புக் காட்டும் பிள்ளைகளோடு விட்டுக் கொடுத்துத்தான் திருத்த வேண்டும். நாமும் எதிர்த்தால் அவர்களின் எதிர்ப்பும் அதிகரிக்கும். ஒரு வயதுக்குப் பின்பு பெற்றோர் பிள்ளைகளுடன் நட்புரிமையோடு பழகுதல் வேண்டும். அதிலும் தாய்மார் தமது பிள்ளைகள் எந்த ஒரு விடயத்தையும் தங்களோடு கலந்து, ஆலோசித்து நடக்கும் வகையில் அன்போடும், ஆதரவோடும் நடக்க வேண்டும். தாய் சத்தம் போட, அதற்கு மேலாகப் பிள்ளை சத்தம் போட பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படுவதற்குப் பதிலாக சண்டைதான் ஏற்படும். பெற்றோர் கோபத்திற்கு இடமளிக்காமல் நடக்கும் முறைகளை கற்க வேண்டும் (Anger management). பிள்ளைகளோடு சுமுகமாகவும், ஆணித்தரமாகவும் உரையாடப் பழக வேண்டும்.

பரம்பரை இடைவெளியினால் பல பிரச்சனைகள் உருவாகின்றன (Inter generational gaps). அதற்குச் சாதி, சமயம், கலா-சாரம் என்ற பாகுபாடு கிடையாது. அதேபோல் பெண்களுக்கு எதிரான வன்முறையிலும் (violence against women) சாதி, சமயம், கலாசாரம் என்ற பாகுபாடு கிடையாது. இவையெல்லாம் உலகளாவிய ரீதியில் எல்லா மக்களுக்கும் இடையில் எங்கும் உள்ளதுதான். (மறு பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்
## கனடியக் காட்சிகள்

# பொங்கல் பொங்குவோம்

பொங்கல் பொங்குவோம் - தைப்
பொங்கல் பொங்குவோம்
எங்கும் உள்ளவர் - ஏற்றம்
எய்தப் பொங்குவோம்!

பச்சை அரிசிநல் - பாசிப்
பருப்புச் சர்க்கரை
உச்சப் பாலிலே - பரிதி
உயரப் பொங்குவோம்!

என்றும் நன்மைகள் - செய்யும்
இரவிக்(கு) எங்களின்
நன்றி சொல்லுவோம் - பொங்கும்
நாக ரீகத்தினால்!

இமயத் திராவிடர் - பெருமை
இலங்கப் பொங்குவோம்
தமிழர் மரபுகள் - நின்று
தழைக்கப் பொங்குவோம்!

சாதி வேற்றுமை - செத்துச்
சாம்ப ராகவும்
ஆதி மடமைகள் - உண்மை
அறிவில் வேகவும்

வலுவி ழந்தவர் - வறியர்
வாழ்வி - ழந்தவர்
புலம் பெயர்ந்தவர் - புதிய
பொழுது காணவும்

தொழுது வாழ்ந்திடா - உழவர்
தொழிலில் ஓங்கவும்
வழுவிலா நெறி - முறைகள்
வாழ்வைத் தாங்கவும்

வாழப் பிறந்தவர் - தங்கள்
மண்ணை ஆளவும்
ஈழத் தமிழர்கள் - இன்னல்
இடர்கள் மாளவும்

பொங்கல் பொங்குவோம் - அன்புப்
பொங்கல் பொங்குவோம்
எங்கும் உள்ளவர் - இன்பம்
எய்தப் பொங்குவோம்!

## கலாசார முரண்பாடுகளும்..

ஆனால் இன்று இவை நடைபெறும் பொழுது உடனுக்குடன் வெகுஜனத் தொடர்புகள் அவற்றை வெளி உலகத்திற்குத் தெரியப்படுத்துவதோடு நிற்காது புலம்பெயர்ந்தோர் விடும் பிழைகளுக்கு அவர்களின் கலாசாரப் பின்னணியையே காரணமாகக் காட்டுகிறார்கள். இதனால் புலம்பெயர்ந்தோர் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். இது பெற்றோருக்கு மாத்திரமல்ல, பிள்ளைகளுக்குக் கூட ஒரு சவாலாக அமைகிறது.

இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு ஒரேயொரு மார்க்கம் பிள்ளை வளர்ப்புச் சம்பந்தமான நெறிகளை பாடசாலையோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி அதனை விருத்தி செய்தலாகும். அக்ஸா பர்வீஸ் தனக்கு ஏற்பட்ட பிரச்சனைகளையெல்லாம் தனது சிநேகிதிகளுக்குக் கூறியிருக்கிறார். அவர்களில் ஒருவராவது அதனை பாடசாலை வழிகாட்டி ஆலோசகருக்கோ, வகுப்பு ஆசிரியருக்கோ தெரியப்படுத்தியிருந்தால் இந்தப் பிரச்சனையை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கலாம். ஏன் இதனை ஒருவர்கூட செய்ய முன்வரவில்லை என்பது தெரியவில்லை.

வீட்டிலிருந்து பிள்ளைகள் வெளியேறுவதைப் பெற்றோர் ஒருபொழுதும் அனுமதிக்கக் கூடாது. செட்டை முளைக்கும் முன்பு ஒரு குருவி கூட்டை விட்டு விழுந்தால் அதனைக் கடித்துக் குதற எத்தனையோ வல்லூறுகளும், பிராணிகளும் காத்திருக்கின்றன. கட்டிளமைப் பருவத்தில் தன்னையே புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ள ஒரு பிள்ளை, அதே மனநிலையிலுள்ள வேறு பிள்ளைகளுடன் வாழ முற்படும் பொழுது அவர்களுக்கு அறிவுரை வழங்க தகுதியான வயது வந்தோர் ஒருவரும் இருப்பதில்லை. குருடனுக்கு, குருடன் தான் வழிகாட்டியாக அமைகிறான். பிள்ளைகள் விடும் சிறு சிறு பிழைகளையும் பெரிதுபடுத்தி அவர்களைத் துன்புறுத்தாது விட்டுக் கொடுத்து, கலந்துரையாடி பிள்ளைகளை வழிநடத்துவது பெற்றோரின் பொறுப்பாகும்.

நாங்கள் பிள்ளைகளாக இருந்துதான் பெரியவர்களானோம். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும் பொழுது தான் தாங்கள் பெற்றோருக்குக் கொடுத்த கரைச்சல்களை உணர்வார்கள். ஆகவே பெரியவர்கள் தான் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும். இந் நாட்டில் ஆலோசனை பெற எத்தனையோ அரசாங்க உதவிச் சேவைகள் உண்டு. அவற்றை நாடிச் செல்வதல் தயக்கம் காட்டக் கூடாது. பெற்றோரும் பிள்ளைகளும் இதனால் பயன் அடைவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## பதினேழாவது ஆண்டு பூர்த்தி வைபவம்

தமிழர் தகவல் பதினேழாவது ஆண்டு பூர்த்தி வைபவம் வழக்கம் போல அடுத்த (பெப்ரவரி) மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

பதினேழாவது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடு, வருடாந்த விருதுகள் வழங்குதல் ஆகியவைகளுடன் இணைந்தததாக இவ்வைபவம் இடம்பெறும்.

வைபவம் பெப்ரவரி 16 திகதி அல்லது 17 திகதி நடைபெற ஏற்பாடாகி வருகின்றது. இந்த மாத முற்பகுதிக்குள் திகதி நிச்சயிக்கப்படும். விருது பெறுபவர்களுக்கும், மற்றும் விழாவில் பங்கேற்கும் பிரமுகர்களுக்கும் உடனடியாக அறிவிக்கப்படும்.


விழாவுக்கு அழைக்கப்படுபவர்களுக்கு பெப்ரவரி முதல் வாரம் முடிவதற்கு முன்னர் அழைப்பிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

ஆண்டு மலர் தயாரிப்பு முடிவடையும் தறுவாயிலுள்ளது. எக்காரணம் கொண்டும் மலருக்கான கட்டுரைகள் இனி ஏற்கப்படமாட்டாது.

விழா தொடர்பாக ஏதாவது தகவல் பெற விரும்பினால், 416 920 9250 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் ஆகியவைகளைப் பதிவு செய்யவும். உங்களுடன் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

## ஒவ்வாமையை தடுக்க தாய்ப் பால்

குழந்தை பிறந்த முதல் மூன்று மாதங்களுக்கேனும் தாய்ப்பால் ஊட்டுதல் குழந்தைகளில் ஒவ்வாமை நோய் வருவதினையும், ஆஸ்துமா நோய் வருவதினையும் தடுக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்கள் தாய்மை அடைந்திருக்கும் போதும், பாலூட்டும் போதும் நிலக்கடலை, மற்றைய மரங்களிலிருந்து பெறப்படும் கொட்டைகள், விதைகள் போன்றவற்றை உண்பதைத் தவிர்த்தல் வேண்டும். குழந்தைக்கு ஆறு மாதமாகும் வரை திண்ம உணவினை தவிர்த்தல் வேண்டும். ஒரு வயதுவரை வேறு பால் வகைகளையும், முட்டையையும் தவிர்த்தல் வேண்டும்.



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை**

தொடர் 13

## வெற்றுத்தாள்

காற்றுத் திசைகளில் அலைக்கழித்தபடி காலடி ஓரமாய்க் கடந்தது ஒரு வெற்றுத்தாள். எதுவும் எழுதப்பட்டிருக்காத தாள். இனியும் எழுதமுடியாத தாள். வெறுமைத்தாள்.

வெறுமைத்தாளா.....?

ஆகா வெறுமை.... வெற்றிடமாய் இருப்பது... எவ்வளவு அழகானது. எல்லா நிறைவுகளும் நிறைவு பெறுகின்ற இடம் வெறுமையல்லவா... குப்பை கூழங்களால் நிறைந்து கிடக்கும் இதயத்தை வெறுமையாக்க முயன்று முடியாமல் தோற்றுக் குவிந்து கிடக்கின்றன தோல்விகள்.

தூய்மையின் முழுமை வெண்மை என்கின்றனர். வெற்றுத்தாள் வெண்மையல்லவா... நிறங்களை ஏற்றுக் கொண்டாலேயே வெற்றுத்தாள் நிறத்தாள் ஆகிவிடுகின்றது. தாள்களிலேயே தூய்மையான தாள் வெற்றுத்தாளா....? எழுதப்பட்ட தாள்கள் தூய்மை குறித்து அதிகமாய்ப் பேசியிருக்கின்றனவே... வெறுந்தாள்களை விடவும்.

அதிகமாகப் பேசுபவனை விட, அமைதியானவன் தான் ஆழமாய் இருக்கின்றான். வரையப்பட்ட வரிகளை விடவும், மிக அதிகமான தகவல்களைக் கொண்டிருக்கின்றதோ வெற்றுத்தாள்கள். எதுவுமே இல்லை என்பதிற்றான் எல்லாமும் இருக்கின்றன என்கின்றது மெய்மை. வெற்றுத்தாள்களுக்குள் எல்லாமும் இருக்கிறதா...?

கபடமில்லாத குழந்தையின் அழகு அதன் வெள்ளை உள்ளத்தின் வெளிப்பாடு என்கிறதா...?

எல்லாச் சாயங்களும் வெளிறிப் போகையில் வெளிப்படுகின்ற வெண்மையே மெய்மை என்கிறதா...?

தேடல்கள் யாவும் முற்றுப் பெறுகின்ற ஒற்றைப் புள்ளி வெறுமை என்கிறதா...? சாயங்களில் தோய்ந்து தோய்ந்து மாய்ந்து போகாமல் சுயமாய் இருங்கள் என்கிறதா....? எதுவுமே இல்லாமல் இருப்பதுதான் முழுமை என்கிறதா?

தப்புத் தப்பான எழுத்துக்களுக்குக் களமாக இருப்பதைவிட கன்னியாக இருந்துவிடுவதே சிறப்பு என்கிறதா? பட்டியலிட்டால் விரிகிறதே... வெற்றுத்தாளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் ஒளிக்கீற்றுகள்.

உன்னை வெறுமையாக்கிக் கொண்டு வா... உனக்கு உன்னைக் காட்டுகிறேன் என்றான் ஒரு ஞானி. வெறுமையான புல்லாங்குழலாக இரு... உனக்குள் இருந்து இனிய இசை பிறக்கும் என்றான் மற்றொருவன்.

கட்டற்ற வெறுமைக்குள் தொலைந்து போ... நீ சொர்க்கத்தில் கண்டெடுக்கப்படுவாய் என்றான் எப்போதோ காணாமற் போன ஒரு சொர்க்கவாசி.
வெறுமைக்குப் பொருள் தேடி அலைந்தான் ஒருவன். வெறிச்சோடிக் கிடந்த தெருவோர மரத்தடியில் படுத்திருந்த சாமியாரை நோக்கி நீண்டன சுட்டு விரல்கள்.

தட்டி எழுப்பி, தாடியைப் பிடித்திழுத்துக் கேட்டான்... வெறுமைக்குப் பொருள் என்ன? வெறுமையாய் ஒரு பொருள் கொண்டு வா...

இதோ குடம் வெறும் குடம்... வெற்றுக்குடம்.... இல்லை.... இது நிறைகுடம்... காற்றால் நிறைந்திருக்கும் குடம்... வெற்றுப் பொருள் கொண்டு வா.... இல்லை... என்னால் முடியாது.

முடியும்... நீயே வெற்றுப் பொருளாகி விடு. வெறுமையின் பூரணம் வெறுமையாகாதவரை புரியாது. வெறுமை... வெண்மை... வெற்றுத்தாள்...

உலகம் ஓதிக் கொண்டிருக்கும் நிறைவுக்கான அர்த்தங்கள் உதிர்ந்து போகின்றன.

வெற்றுப் பொட்டலில் மூசும் காற்றால் எதையும் வீழ்த்த முடியாது.


வெற்றுத்தாளைப் பார்க்கின்றேன். காற்றின் தாளத்திற்கேற்ப பாடிக்கொண்டே பறக்கிறது.

இனி மை கொண்டு ஏதேனும் வெற்றுத்தாள் மீது எழுத முடியுமா? அவ்வாறே எழுதினாலும் வெற்றுத்தாளின் ஆழம் கடந்து எழுத முடியுமா?

இதுவரை இல்லாத ஒரு தனி மதிப்பு வெற்றுத்தாள்களின் மீது ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன்
எழுதுவது

# களம் காணும் பதவிகள்

உலகெங்கும் ராணுவம் உள்ளது என்பதும் அந்த ராணுவத்தில் பல பதவிகள் உள்ளன என்பதும் பெரியதொரு ராணுவ ரகசியம் இல்லை.

மொரிஸியஸ் உட்பட 24 நாடுகள் இதற்கு விதிவிலக்கு - ஏனெனில் அங்கு ராணுவம் கிடையாது.

ராணுவத்தில் அதி உயர் பதவியாகக் கருதப்படுவது பில்ட் மார்ஷல் பதவியாகும். ஜெனரல் எனும் பதவியும் இதே தரத்தை ஒத்தது. அடுத்த பதவி லெப்டினன்ட் ஜெனரல். அதற்கும் அடுத்தது மேஜர் ஜெனரல்.

உச்சமான இப் பதவிகள் தமிழீழத்தில் சிங்களர்க்கோ அச்சத்தின் உச்சமாகும்.

இலங்கை ராணுவத்தில் முதலாவது மேஜர் ஜெனரல் பதவியை 1955 முதல் 1959 வரை வகித்தவர் அன்ரன் முத்துக்குமார் என்ற தமிழர்.

இதற்கு அடுத்த ராணுவ உயர் பதவி தான் பிரிகேடியர்.

தமிழீழத்தில் முதன்முறையாக இப்பதவிக்குக் கனம் ஊட்டுபவர் இதயத்தில் நிறைந்த இனிய தமிழ்ச்செல்வன்.

பிரிகேடியர் என்பவர் பல களங்களில் பிரமிக்கத்தக்க வெற்றியீட்டியிருப்பார். சிறு சிறு படையணிகள் பலவற்றிற்கு பாசறைப் பயிற்சி அளித்து தீரத்துடன் வழிநடத்தியிருப்பார். தனது சேனைகளின் உயிராபத்தைத் தகர்த்தெறிந்து எதிரியை விரட்டியிருப்பார் என்கின்றது கலைக்களஞ்சியம்.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வனிடம் இவற்றிற்கும் மேலாக பல போராற்றல்களும் சாதுரியம் மிக்க பேச்சுவார்த்தைப் பேராற்றலும் சிரிப்புடன் சிறந்தன.

கேணல் - லெப்டினன்ட் கேணல் - மேஜர் - கப்டன் - லெப்டினன்ட் - இரண்டாம் லெப்டினன்ட் - சார்ஜன்ட் போன்றவை இதுவரை எமது போராளிகளின் களப்பணியை மறைவில் அடையாளமிட்டன.

ஆதிக்கம் செறிந்த தமிழீழத்தின் தரைப்படை கடற்படை வான்படைகளில் அதிகாரபூர்வ பதவிப் பட்டியல் சர்வதேச தரத்தில் இதுபோன்றுதானிருக்கும்.

**Army**

1. Field Marshal
2. General
3. Lieutenant General
4. Major General
5. Brigadier
6. Colonel
7. Lieutenant Colonel
8. Major
9. Captain
10. Officer Cadat
11. 2nd Lieutenant
12. Warrant Officer 1st class
13. Warrant Officer 2nd class
14. Warrant Officer 3rd class
15. Staff sergent
16. Sergent
17. Coporal Bombardier
18. Lance Coporal Bombardier
19. Private

**Navy**

1. Admiral of the fleet
2. Admiral
3. Vice Admiral
4. Rear admiral
5. Commodore
6. Lieutenant Commodore
7. Lieutenant
8. Sub Lieutenant
9. Warrant Officer
10. Petty Officer
11. Leading Rate
12. Sea man

**Air Force**

1. Field Marshal
2. General
3. Lieutenant General
4. Brigadior
5. Colonel
6. Lieutenant Colonel
7. Major
8. Captain
9. Lieutenant
10. Warrant Officer
11. Sergent
12. Coporal
13. Private

## கிரான்பெரி பழரசம் இருதயத்திற்கு நல்லது!

இதுவரை காலமும் சிவப்பு நிற வைனும், திராட்சை பழரசமுமே இருதய நோயிலிருந்து பாதுகாக்க நல்லது என கூறப்பட்டு வந்தது. ஆனால் கியூபெக்கிலுள்ள லவால் பல்கலைக்கழகத்தின் புதிய ஆராய்ச்சி ஒன்றின்படி, கிரான்பெரி பழரசமும் இருதயத்திற்கு நன்மை செய்கிறது என கண்டறியப்பட்டுள்ளது.
இது எட்டு வீதத்தினால் நல்ல கொலஸ்ரோலான HDL இன் அளவை அதிகரிப்பதன் மூலமும், அதிகளவில் அன்ரியொக்சிடன்ஸ் இனை கொண்டிருப்பதன் காரணமாகவும் இரத்த சுற்றோட்டத்தை அதிகரிக்கின்றது. இந்த ஆராய்ச்சி 18 இலிருந்து 70 வயதுவரையுள்ள சிறிது எடை கூடுதலான, கூடாத கொலஸ்ரோலான LDL உயர்வாகக் காணப்பட்ட ஆண்களிடையே நடத்தப்பட்டது. மருந்துகள் எடுக்காமல், கிரான்பெரி ஜுஸ் ஒவ்வொரு நாளும், நான்கு கிழமைகளுக்கு கொடுக்கப்பட்ட போது HDL இன் வீதம் உயர்ந்து காணப்பட்டுள்ளது.

கிரான்பெரியினை காய்ந்த பழமாகவும் உட்கொள்ளலாம். கிரான்பெரியின் மற்றொரு மகத்துவம், சிறுநீரகத்தில் ஈ-கோலி பக்ரீறியாவினால் ஏற்படக்கூடிய தொற்றினை தடுக்கக் கூடியது.

## வாழ்வதற்கான முதல் நாடு

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி ஐஸ்லான்ட் (Iceland) உலகிலேயே வாழ்வதற்கு விருப்பமான முதல் நாடாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. நோர்வே இரண்டாவதாகவும், முறையே அவுஸ்திரேலியா, கனடா, அயர்லான்ட் ஆகியவை 3, 4, 5 இடங்களைப் பெற்றிருக்கின்றன. அமெரிக்கா கடந்த வருடத்தில் எட்டாம் இடத்திலிருந்து இவ்வருடம் பன்னிரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. நோர்வே ஆறு வருடங்களாக முதலாமிடத்திலிருந்தது. வாழ்க்கைக் காலம், தனிநபர் வருமானம் போன்றவற்றின் அடிப்படையில் ஐஸ்லான்ட் இவ்வருடம் முந்தி விட்டது. ஜப்பானியர்களே கூடிய வாழ்க்கைக் காலமாக 82.3 வருடங்களைக் கொண்டவர்களாகவுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை அதிகரிப்பு!

றொறன்ரோவில் 30 வீதமான குடும்பங்கள் வறுமையுடன் வாழ்வதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. தேசிய வருமானம் கடந்த சில வருடங்களில் அதிகரித்திருப்பினும், பெரும்பான்மையோர் நல்ல நிலையிலும், முன்னேறும் நிலையிலும் இருப்பினும் கிட்டத்தட்ட பிள்ளைகளுள்ள 93,000 குடும்பங்கள் வறுமையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 1990 இல் இது 16 வீதமாகக் காணப்பட்டுள்ளதாகவும், கனடாவின் மிகப் பெரிய நகரமான றொறன்ரோ பின்தங்கிக் காணப்படுகின்றது என றொறன்ரோ யுனைட்டட் வே அறிவித்திருக்கின்றது.

இரு பெற்றோர் கொண்ட இரு பிள்ளைகளையுடைய குடும்பம் வருட வருமானமாக 27,500 டாலர்களுக்குக் குறைவாக வாழுமானால் அக்குடும்பம் வறுமையுடன் இருப்பதாக கருதப்படுகிறது.

## மரபணு நிறுத்தம் கொழுப்பை குறைக்கும்!

அமெரிக்க புதிய ஆய்வறிக்கை ஒன்று, ஈரலில் காணப்படும் ஒரு மரபணுவின் தொழிற்பாட்டை நிறுத்தி வைப்பதனால் காபோவைதரேற் உடற்கொழுப்பாக மாற்றப்படும் செயற்பாடு தடைப்படும் என பரிந்துரைக்கின்றது. SCD-1 எனும் மரபணுவானது உடற்கலங்கள் எல்லாவற்றிலும் காணப்பட்ட போதிலும், ஈரலிலேயே இதன் விசேட தொழிற்பாடானது அதிக காபோவைதரேற்றுள்ள உணவுகளிலிருந்து உடற் கொழுப்பை உருவாக்குவதில் முக்கியமானதாகக் காணப்படுகின்றது என Wisconsin பல்கலைக்கழக அறிக்கை தெரிவிக்கின்றது.

ஜேம்ஸ் நிராம்பி எனும் உயிரியல் விஞ்ஞானி, இந்த மரபணு நிறுத்தி வைக்கப்படக் கூடியதொன்றென்கிறார். இதை குறிப்பாக ஈரல் கலங்களிலிருந்து எடுத்துவிட்டால், உடற்கொழுப்பு பிரச்சனை தடுக்கப்படக்கூடியதென்கிறார்.



பியின்ரஸ் துரைசிங்கம்

19

### கணினிப் பக்கம்

## காக்க காக்க கணினி காக்க...

மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்புவதற்கு விரும்பினால், எப்போதும் நீங்கள் உங்களது மின்னஞ்சல் இயக்கிக்கு சென்று அங்கே புதிய மின்னஞ்சல் அனுப்புவதற்கான கட்டத்தை அழுத்தி, உரிய தகவல்களைப் பதிவு செய்த பின்னர், பெறுநரின் மின்னஞ்சல் முகவரியை இட்டு, 'போ' என்று சொடுக்கி விட்டால், ஒரு சில நிமிடங்களில் பெறுநரிடம் சென்று, அவரது பார்வைக்காக அந்த மின்னஞ்சல் காத்திருக்கும்.

இங்கே, தகவல்களைப் பதிவு செய்வது என்ற விடயத்தில் இரண்டு வழிகள் உள்ளன.

1. நேரடியாக மின்னஞ்சலைத் திறந்து வைத்துக் கொண்டு, அங்கே உடனடியாக விபரங்களைத் தட்டச்சு செய்து தகவலை அனுப்பி விடுவது ஒரு வழி. இந்த முறையைப் பாவிப்பதில் சில தீமைகள் இருக்கின்றன.

a. எழுத்துப் பிழைகள், சொற் பிழைகள், கருத்துப் பிழைகள் போன்றவை திருத்தப்படாமல் சென்றுவிட வாய்ப்பிருக்கிறது.

b. ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துருக்களை (fonts) பாவிப்பதற்கு வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே உள்ளன.

c. எழுத்துக்களின் அளவை மாற்றுதல், மெருகூட்டுதல், கட்டம் தீட்டுதல், நிறம் மாற்றுதல், மையப்படுத்துதல், படங்களை அல்லது படவுருக்களை (icons) இணைத்தல் என்று, இன்னோரன்ன பல்வேறு செயற்பாடுகளும் கடினமானவையாகக் காணப்படும்.

d. தமிழில் எழுதுவதாக இருந்தால், நேரடியாக மின்னஞ்சலில் தட்டச்சு செய்யும்போது தமிழ் எழுத்துரு பற்றிய பிரச்சனைகள் எழலாம்.

e. எழுதிக் கொண்டிருக்கும்போது தற்செயலாக அல்லது தவறுதலாக அனுப்ப நேர்ந்துவிட்டால், சொல்லவந்த விடயம் பாதியிலேயே பெறுநரின் கைக்குக் கிட்டி, தேவையற்ற கருத்து மோதல்களை உருவாக்கி விடலாம்.

2. இத்தகைய தவறுகளைத் தவிர்ப்பதற்காக, எப்போதும் மின்னஞ்சலில் அனுப்ப விரும்பும் விடயத்தை, வேர்ட் (Word), பப்லிசர் (Publisher) அல்லது ஏதாவது உங்களுக்குப் பரிச்சயமான மென்பொருள் இயக்கியைப் பயன்படுத்தி, அவற்றில் தட்டச்சு செய்து, தவறுகளைத் திருத்தி, எழுத்துருக்களை சரியாக அமைத்த பின்னர், எழுதிய விடயத்தை அப்படியே பிரதி (copy) செய்து, மின்னஞ்சல் அனுப்பும் தளப் பகுதியில் ஒட்டி அல்லது பதிவிலிட்டால் (paste), அனுப்பப்படும் விடயம், மிகத் தரமானதாகத் தோற்றமளிக்கும்.

a. இப்படியான மின்னஞ்சல்களைத் தயாரிக்கும் போது, பாமினி (bamini) எழுத்துருவைப் பாவிப்பது பொதுவாக விரும்பப்படுகிறது. தற்போது யூனிகோட் எழுத்துரு பரவலாகப் பாவனைக்கு வந்துவிட்டதுடன், அனைவராலும் பரிந்துரைக்கப்படுகின்ற ஒன்றாகவும் இருக்கிறது.

எனினும், மின்னஞ்சல் அல்லது கணினி உலகின் மிக ஆரம்பகட்டப் பாவனையாளர்கள், யூனிகோட் என்ற தகுதர எழுத்துருவின் தன்மையையும் அதை உருவாக்கிப் பாவிக்கின்ற யுக்திகளையும் பழக்கப்படுத்திக் கொள்ளும்வரை, பாமினி எழுத்துருவைப் பாவிப்பது, பெறுநர் யாராக இருந்தாலும், அதை அப்படியே தமிழில் படிப்பதற்கு ஏதுவாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## நிலாவில் நில விற்பனை; ஒரு ஏக்கர் 37 டாலர்!

நிலவிலே நிலம் வாங்குவதற்கு, அதாவது சந்திர மண்டலத்தில் காணி வாங்குவதற்கு இப்போது பலத்த போட்டி நடைபெறுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தப்படி, எந்த நாட்டு அரசும் சந்திர மண்டல நிலத்தை உரிமை கோர முடியாது என்ற அறிவிப்பு வந்த பின்னரே இதன் மவுசு அதிகரித்துள்ளதாம்.

ஒரு ஏக்கர் நிலம் 16 டாலராகவிருந்தது. தற்போது 37 டாலர்களாகியுள்ளது. அங்கு நிலம் வாங்குவதற்கு முன்னணி றியல் எஸ்டேட் நிறுவனமான 'யுபிஎஸ்' உதவி வருகின்றது.

ஜேர்மனியர்களே இதுவரை கூடுதலான நிலத்தை அங்கு கொள்முதல் செய்துள்ளனராம் அதனையடுத்து ஸ்பெயின், பிரிட்டன், போலந்து நாட்டினர் வாங்கி வருகின்றனர்.

நிலவின் நில விலையே அமெரிக்க வீடு நிலம் ஆகியவற்றின் விலை அடுத்த மாதங்களில் எப்படியிருக்கும் என்பதை முற்கூட்டி அறியத் தருவதாக ஒரு வதந்தி நிலவுகின்றது.

## பெற்றோரை பராமரிக்கத் தவறினால் 3 மாதச் சிறை

பெற்றோரை முதுமைக் காலத்தில் பராமரிக்கத் தவறினால் மூன்று மாதச் சிறைத் தண்டனை விதிக்கும் சட்டம் அறிமுகமாகியுள்ளது.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் என்ற பெயரிலான இச்சட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்டு இப்போது சட்டமாக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, இவ்வாறு தண்டனை விதிக்கப்படுபவர்கள் அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்யவும் சட்டம் தடை விதித்துள்ளது.

சொந்தப் பிள்ளைகள் மட்டுமன்றி, முதியவர்களின் சொத்துகளைப் பராமரிக்க சட்ட உருத்துப் பெற்ற உறவினர்களும் இச்சட்டத்துக்குள் அடங்குகின்றனர்

இது தொடர்பாக கனடாவிலுள்ள தமிழர் அமைப்பொன்றின் பிரமுகர் கருத்து வெளியிடுகையில், இவ்வாறான சட்டம் கனடாவில் அறிமுகமானால் சுமார் 70-75 வீதமான பிள்ளைகளும் 'உள்ளே' தள்ளப்படுவார்கள் என்றார்.

## முதியோர் அமைப்புகளில் கூத்தும் குத்து வெட்டும்

கனடாவிலுள்ள தமிழ் முதியோர்கள், சங்கங்கள் அமைத்து விழாக்கள் நடத்தி ஒன்றுகூடல்கள் ஏற்படுத்தி பல சாதனைகள் புரிந்து மற்றையோருக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்கள்.

ஆனால் இன்று 'தலைகீழாக' மாறி, சந்தியிலும் சந்தையிலும் பேச்சுப் பொருளாகி நிற்கின்றனர். காவல்துறையினரை அழைத்துக் கூட்டம் நடத்தவும், வழக்கறிஞர் ஊடாக விளக்க 'நோட்டீஸ்' அனுப்பவும் வேண்டிய அளவுக்கு நிலைமை இங்கு மாறியுள்ளது. சேவை நோக்கை விட -- பதவி ஆசைதான் காரணமாம்.

ஸ்காபரோவில் உருவான ஒரு முதியோர் சங்கம் பின்னர் இரண்டாகி, அதிலொன்று இப்போது 'குஞ்சு' பொரிக்கும் கட்டத்துக்கு வந்துள்ளது.

மற்றொரு முதியோர் சங்கத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் அங்கத்தவர்களுக்கு மாசு ஏற்படுத்தும் மொட்டைக் கடிதங்கள் பறக்க விடப்பட்டன.

பின்னர் புதிதாக வந்த அந்த சங்கத் தலைவர் வேறு சில விளையாட்டுகளில் ஈடுபட்டு ஒரு வருடத்திலேயே பதவி இறக்கப்பட்டார்.

எங்கள் இளையோர்தான் முதியோர் சமாசாரங்களில் தலையிட்டு நிலைமையைச் சீராக்க வேண்டும்!

**உதாசனன் உலா விருந்து**

## 'குடி' மக்களுக்காக இலவச இரவுச் சேவை

டிசம்பர் கடைசி நாளன்று இரவு வேளையில் ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள நகரசபைகளின் நிர்வாகத்திலான பல்வேறு போக்குவரத்துச் சபைகளும் இலவச சேவைகளை நடத்தின.

தங்களது போக்குவரத்துச் சேவைகளைப் பிரபல்யப்படுத்தவே இந்த நிறுவனங்கள் இவ்வாறு 'ஓசி'ச் சேவைகளை வழங்கியதாகப் பலரும் எண்ணலாம்.

ஆனால் உண்மையான காரணம் வேறு. டிசம்பர் 31 திகதி வருடக் கடைசி நாள் 'பார்ட்டி;கள் ஏராளம் இடம்பெறும். இவைகளில் பங்குபற்றுபவர்கள் தாராளமாகப் 'பானம்' அருந்துவார்கள். அதன்பின்னர் போதையில் வாகனம் ஓட்டுவதால், அன்றிரவு விபத்துதுகள் அதிகமாக இடம்பெறுவது வழக்கம்.

இதனைத் தடுப்பதற்காககவே, 31 திகதி இரவு 'ஓசி'ப் பயண வசதி வழங்கப்பட்டதாம். ஒருவகையில் பார்த்தால் நல்ல முடிவுதான்.

ஆனால், 'பெருங்குடி'களுக்காக, சாதாரண மக்களின் வரிப்பணத்தை இவ்வாறு கரியாக்க வேண்டுமா என்னும் கேள்வியும் எழுகின்றது.

## மாணவர் சித்திபெறவில்லை; ஆசிரியருக்குத் தண்டனை

தவணைப் பரீட்சை, வருடாந்தப் பரீட்சை, சிறப்புப் பரீட்சைகளில் மாணவர்கள் சித்திபெறத் தவறினால் அவர்களுக்குத் தண்டனை இல்லை; வகுப்பேற்றமும் தடையில்லை.

மாறாக, அவர்களது ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்கப்படுகின்றது. சகல மாணவர்களுக்கும் சரியாகக் கற்பிக்கக்கூடிய வகையில் இவர்கள் தகுதியாக்கப்படுகின்றனர். 'மக்கு' ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர்.

இந்தோனேஷியாவின் சில மாநிலங்களில் அமுலிலுள்ள இந்த முற்போக்குச் சட்டம், இவ்வருடத்தில் நாடு முழுவதற்கும் விரிவாக்கம் செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறமகள் நூல் கொழும்பில் அறிமுக அரங்கு

நிகழ்வின் பதிவு









மூத்த எழுத்தாளர் (குறமகள்) வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி - ஓர் ஆய்வு' நூல் அறிமுக விழா கடந்த மாதம் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தது. மாவை வரோதயன் வரவேற்புரை நிகழ்த்தினார். கோகிலா மகேந்திரன், சோ. தேவராஜா, பேராசிரியர் சந்திரசேகரம், பண்டிதர் க. செல்லத்துரை ஆகியோர் நூலை ஆய்வு செய்து உரையாற்றினர். கலந்துரையாடலும் இடம்பெற்றது. விழாவின் சில காட்சிகளை இப்பக்கத்தில் காணலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# கற்பித்தோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

கொஞ்சம் பொறுத்திருங்கள்:

"ஆறின கஞ்சி பழம் கஞ்சி" என்பார்கள். நான் ஸ்ரீலங்கா சென்றது 2007 மாசி மாதம். அது பற்றி எழுதலாம், எழுதலாம் என எண்ணிப் பிற்போட்டு இறுதியில் சென்ற மாதம் தான் ஆரம்பித்தேன். இரண்டு மாதத்தில் முடிப்பீர்களா என்றார் திரு. அப்போதைக்கு ஆம் என்று விட்டேன். இப்போ தெரிகிறது அது நிறைவு பெற இன்னும் இரண்டு மாதமேனும் எடுக்கும். வருகிற மாதம் ஆண்டுமலர். இதில் அதன் தொடர்ச்சி வரமாட்டாது. ஆகவே இம்மாதமும் என்னை மன்னித்தீர்கள் என்றால் நான் எனது அண்மைப் பிரயாணம் பற்றிச் சுருக்கமாகக் கூறிவிட்டு மார்ச் மாதத்தில் அக்கட்டுரையைத் தொடர்வேன்.

கல்விப் பணியில் நான் புகுந்து கடந்த வருடம் 50 ஆண்டுகள் பூர்த்தி செய்துவிட்டேன். அதனை நான் மறந்தாலும் எனது விசுவாசமிக்க மாணவர்கள் சிலர் மறக்காமையால் ஒரு முயற்சியில் ஈடுபட்டனர். ஜெர்மனியில் வாழும் 'வெற்றிமணி', 'சிவத்தமிழ்' ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் கலாநிதி ந.க.சு. சிவகுமாரன் அவர்கள் தனது சஞ்சிகையில் நான் எழுதி வந்த விஞ்ஞானக் கட்டுரைகளைத் 'திறவு கோல்' எனும் நூலாகவும், கொழும்பு வாழ் கோகிலா மகேந்திரன் அவர்கள் நான் 'தமிழர் தகவல்' ஆண்டு மலர்கள், மற்றும் 'ஈழநாடு' போன்றவற்றில் எழுதிய கட்டுரைகளை 'மனம் எங்கே செல்கிறது?' என்ற நூலாகவும் பிரசுரித்துள்ளனர்.

நான் நவம்பர் 24 எனது மருமகனின் மகனுடைய திருமணத்திற்காக இலண்டன் மாநகர் செல்ல வேண்டியிருந்தது. இதை அறிந்த கலாநிதி சிவகுமாரன் 25ம் திகதி ஜெர்மனி வாருங்கள், அதற்கிடையே நான் "திறவுகோலினை" அச்சடித்து விடுவேன் வெளியீடு வைப்போம் என்றார். "சரி" என்றேன். எனது பேரன்பிற்குரிய மாணவனும், இலண்டன் சைவ சமயப் பேரவையினைக் கடந்த 30 ஆண்டுகளாகச் சிறப்பாக நடத்தி வருபவருமாகிய 'தொண்டர் திலகம்' இராமநாதன் ஜெர்மனிக்குப் போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்தார். நான் இங்கிலாந்து வருவதாக அறிந்த எனது அன்பிற்குரிய வைத்தியகலாநிதி பகீரதன் அழைத்தார். "சேர் நீங்கள் ஒரு கிழமை முந்தி வரவேண்டும். 17ம் திகதி எமது கிங்ஸ்ரன் பாடசாலையின் கலைவிழா. அதற்கு உங்களைப் பிரதம அதிதியாக அழைப்பது என ஆட்சிக் குழு தீர்மானித்துள்ளது. வரலாம் தானே என்றார். பகீரதன் எனது பெருமதிப்பிற்குரிய தலைவர் அமிர்தலிங்கத்தின் புத்திரன். என்னிடம் கல்வி கற்காத என்மேல் ஒரு மாணவனுக்கும் மேலான அதீத மரியாதையுடைய பெருமகன். எனது அபிமான மாணவி வைத்திய கலாநிதி மலர்விழி கரம் பற்றியவர். மறுக்க முடியுமா? வருகிறேன் என்றேன். எப்போ என்றார். 17 காலையில் அங்கு நிற்பேன் என்றேன். மாலை விழா களைப்பாயிராதா என்றார். நீங்கள் எல்லோரும் என்னை தூக்கி வைக்கிறீர்கள். எனக்கு என்ன களை என்றேன். இராமநாதன் அழைத்தார். 18ம் திகதி எமது மகாஜனா நூற்றாண்டு நிதியக் குழுவின் கூட்டம் வைத்துள்ளோம். 1ம் திகதி நூல் வெளியீட்டினை இங்கே வைப்போமா என்றார். அது சரிவராது எனது மருமகனின் மகனது திருமண விருந்துபசாரம் உள்ளது என்றேன். நான் இங்கு வருவதாக அறிந்த புத்தூர் சோமாஸ்கந்தாப் பழைய மாணவர்கள் 2ம் திகதி நடைபெறவுள்ள தமது கலைவிழாவினுக்கு என்னைப் பிரதம அதிதியாகக் கேட்டு ஒப்புக் கொண்டு விட்டேன். எனவே 2ம் திகதியும் சரிவராது. ஆகவே 8ம் திகதி வைக்கலாம் என்றேன். சரி என்றார் ஆனால் அன்றைய தினம் திரு. விமல் சொக்கநாதன் தனது வானொலிக்கலை நூலினை வெளியிடவுள்ளதாகவும் இது பற்றிய அழைப்புக்கள் அனுப்பப்பட்டதாகவும் கூறியமையால் எமது வெளியீட்டினை 30ம் திகதி வைப்பதாக இராமநாதன் கூறினார்.

சுவிஸ் நாட்டிலே எனது அருமை நண்பன் கணபதிப் பிள்ளை உள்ளார். அவர் சிறந்த அமைப்பாளர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பழைய மாணவர் சங்க விழாக்களைச் சென்ற இரண்டு வருடங்களாகச் சுவிஸ் நாட்டிலே வெற்றிகரமாக நடத்தியுள்ளார். அங்கே கணா சயன்ஸ் அக்கடெமி எனும் தனியார் பிரத்தியேக கல்வி நிறுவனத்தை நடத்தி வருகிறார். மிகவும் கண்டிப்பானவர். கடமை உணர்வு அதீதமாக உள்ளவர். ஆகவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இவர் கைகளில் ஒப்படைத்துள்ளனர். அக்கடெமி பிரமாதமாக ஓடுகிறது. அங்கே வெளியீடு வைக்கலாம் என எண்ணினேன். அவர் 9ம் திகதி வைப்பதாகக் கூறி ஆவன எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்தார்.

**கிங்ஸ்ரன் விழா:** 16ம் திகதி புறப்பட்டேன். 17 காலை ஹீத்துறோவில் கால் வைத்தேன். பகீரதன் காத்துக் கொண்டு நின்றார். வீடு சென்றோம். மலர்விழி புன்முறுவலுடன் காத்து நின்றார். உணவு. சிறிது ஓய்வு எடுங்கள் என்று சொன்ன மலர்விழி, அத்தனை இராணி, குங்குமம், குமுதம், ஆனந்தவிகடன் அனைத்தையும் என் முன்னே குவித்துவிட்டார். பின் எங்கே ஓய்வு. மாலை பாடசாலைக் கலைவிழாவினுக்குச் சென்றோம். தலைவரின் மனைவி மங்கையர்க்கரசியும் வந்திருந்தார். கிங்ஸ்ரன் பாடசாலை ஒரே குடையின் கீழ் தமிழ்க் கல்வியுடன் வீணை, வயலின், வாய்ப்பாட்டு, மிருதங்கம், நடனம் என்ற அத்தனை கலைகளையும் மிகவும் குறைந்த கட்டணத்தில் மிகத் திறமையான ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கிறது. கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக அளப்பரிய சேவையை அங்கு வாழ் தமிழ் மக்களுக்காக ஆற்றி வருகிறது. எனது மாணவன் ஜெகதீஸ்வரம் பிள்ளையே தான் அதிபர். பிரபலமான பண்டிதர் கதிரிப் பிள்ளையின் மகன். மிக்க தமிழ் அறிவுடையவர். அவர் வழிநடத்தலில் அர்ப்பணிப்புடன் பல ஆசிரியர்கள் தன்வயத் தொண்டர்களாகவும் மிகக் குறைந்த ஊதியத்துடனும் சேவையாற்றுகிறார்கள். இங்கு தமிழ்க் கல்விக்கு கல்விச் சபைகள் பொறுப்பேற்று நடத்துகின்றன. ஆனால் அங்கு தனியார்கள் அல்லது தனிப்பட்ட நிறுவனங்கள் தமிழ்ப் பாடசாலைகளை நடத்துகின்றன. அதில் கிங்ஸ்ரன் பாட-சாலையும் கலாநிதி நித்தியானந்தன் நடத்தும் பாடசாலையும் மிக்க பிரபலம். உள்ளூராட்சி அமைப்புகள் ஓரளவு நிதி உதவி செய்தாலும் பெற்றோருடைய பங்களிப்பு பாடசாலைகளை நடத்துவதற்குப் பெரிதும் உதவுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் உருவானதன் விளைவாக ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து தமிழ் மக்கள் இங்கிலாந்து நோக்கிப் புலம்பெயர்வதால் இலண்டன் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழின் தரம் சிறிது உயர்ந்திருப்பதைக் காண முடிகிறது! கலை நிகழ்ச்சிகள் மிகவும் கவர்ச்சிகரமாயிருந்தன. சிறப்பாகப் பல்லியம் நிகழ்ச்சி பிரபல மிருதங்கக் கலைஞர் ஞானவரதனுடைய மேற்பார்வையில் நடைபெற்றது. உள்ளம் நிறைந்த நிகழ்ச்சியாக இருந்தது. பெற்றோர்களுடைய ஈடுபாடு பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் அனுசரணை.

**ஜேர்மன் விழா:** 25ம் திகதி காலை நானும் இராமநாதன் தம்பதிகளும் ஜேர்மனி போவதற்காக லூட்டன் விமான நிலையம் சென்றோம். அங்கே எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. எனது அருமை நண்பர் புத்திரசிங்கத்தினை அவரது மகளும் எனது அபிமானத்துக்குரியவருமான வைத்திய கலாநிதி சிவநங்கை குறுநகையுடன் அழைத்து வந்திருந்தார். இது இராமநாதனும் புத்திரசிங்கமும் செய்த சூழ்ச்சி. என்னைத் திகைக்க வைப்பதற்கென்றே இறுதிவரை இதுபற்றி அவர்கள் என்னிடம் கூறவில்லை. நண்பர் புத்திரசிங்கம் எனது நன்மை தீமைகளில் எப்பொழுதுமே கலந்து கொள்பவர். ஒரு மணித்தியாலப் பிரயாணத்தின் பின்னர் பகல் 11:00 மணிக்கு டோற்மண்ட் விமான நிலையத்தை எமது விமானம் சென்றடைந்தது. சிவகுமாரன் காத்து நின்றார். விழா தொடங்குதற்கான நேரம் பிற்பகல் 3:28 என அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தார். நாம் வராவிட்டாலும்
(26ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வின் பதிவு

## செல்வா வெற்றிவேலுவின்
## **Homelife Future Realty** வருடாந்த விருது இரவு





செல்வா வெற்றிவேலுவின் Homelife Future Realty வீடு விற்பனை நிறுவன வருடாந்த விருதுடன் விருந்து கலந்து இரவு ஒன்றுகூடல் கடந்த மாதப் பிற்பகுதியில் இடம்பெற்றது. நிறுவனத்தின் பல்துறைச் சாதனையாளர்களுக்கு திரு. செல்வா வெற்றிவேலு அவர்கள் விருதுகள் வழங்கி மதிப்புச் செய்தார். 2007ஆம் ஆண்டின் அதிகூடிய விற்பனப் பிரதிநிதி விருதையும், President Club விருதையும் திரு. டிரேஷ் கிருஷ்ணபிள்ளை பெற்றார். Sales person of the year விருதை திரு. சத்தி சிவசுப்பிரமணியமும், Rookie of the year விருதை திரு. ராஜ் நடராஜாவும் பெற்றனர். Diamond Club விருது திரு. தவராஜ் லோகசுந்தரம் வசமானது. Platinum Club விருதுகளை திருவாளர்கள் சத்தி சிவசுப்பிரமணியம், சிவா சண்முகநாதன், ஜோய் செல்வநாயகம் ஆகியோர் பெற்றனர். Gold Club விருதை அகிலன் சிவபாலன் தமதாக்கினார். வழக்கறிஞர் ஹரி ஆனந்தசங்கரி உட்படப் பலர் பாராட்டுரைகள் நிகழ்த்தினர். இவைகளின் ஒளிப்படங்கள் இப்பக்கத்தில்.


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் பதிவு

# கனடா தமிழூர் நிதிக்கான நிவாரணம் 9











தாயகத்திலுள்ள பூநகரியில் அமைக்கப்பட்டு வரும் 'கனடா தமிழூர்' நிதிக்காக 'மின்னல்' செந்தில்குமரன் நடத்திய நிவாரணம்-9 நிகழ்ச்சி டிசம்பர் மாத பிற்பகுதியில் ரொறன்ரோவில் நடைபெற்றது. ஆடல் பாடலுடன் கூடிய இரவு விருந்து வைபவமாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மார்க்கம் நகர சபை உறுப்பினர் திரு. லோகன் கணபதி இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார். தமிழகத்திலிருந்து வந்த இரு பாடகர்கள் வைபவத்தில் கலந்து இதனைச் சிறப்புச் செய்தனர். இந்த நிகழ்ச்சியின் மூலம் எண்பதாயிரத்துக்கும் அதிகமான டாலர்கள் சேகரிக்கப்பட்டது. (ஒளிப்படங்கள்: காந்தி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய நகரங்களில் 'திறவுகோல்' நூல் வெளியீடு

## நிகழ்வின் பதிவு





மகாஜன முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் 'திறவுகோல்' கட்டுரைத் தொகுப்பின் வெளியீட்டு வைபவம் கடந்த மாதம் ஜேர்மனியில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஐரொப்பாவின் பல நகரங்களில் நூல் அறிமுக வைபவங்களும் இடம்பெற்றன. 'திறவுகோல்' ஒரு வெற்றிமணி வெளியீடு. இந்நூல் வெளியீட்டு விழா, அறிமுக விழாக்கள் பற்றிய விபரங்களை நூலாசிரியரே ஒரு பயணக் கட்டுரை வடிவில் முழுமையாக எழுதியுள்ளார். இந்த இதழின் 14, 26, 33ம் பக்கங்களில் இதனைப் படிக்கலாம். 'திறவுகோல்' உட்பட இவரால் எழுதப்பட்ட மூன்று நூல்களின் வெளியீட்டு விழா விரைவில் ரொறன்ரோவில் நடைபெறவுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் ஐந்து நகரங்களில் 'தேசத்தின் குர











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரல்' முதலாவதாண்டு நினைவு வணக்க நிகழ்வு





2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 திகதி இலண்டனில் காலமான 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்களின் முதலாவதாண்டு நினைவு வணக்க நிகழ்வுகள் கனடாவில் ரொறன்ரோ மொன்றியல் நகரங்களில் நடைபெற்றது. ரொறன்ரோ பெரும்பாகத்தில் பீல், ரொறன்ரோ மத்தி, ஸ்காபரோ, மார்க்கம் பகுதிகளில் உணர்வுடனும், எழுச்சியுடனும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அந்தந்தப் பகுதி தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகங்கள் இவைகளை ஏற்பாடு செய்திருந்தன. காலநிலை குளிரும் பனியும் நிறைந்து சீரற்றதாக இருந்தும், நூற்றுக்கணக்கான உணர்வாளர்கள் - முக்கியமாக முதியவர்களும் சிறாரும் பெருமளவில் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். தாயகக் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம், அரசியல் ஆய்வாளர் திரு எஸ் திருச்செல்வம் ஆகியோர் இந்நிகழ்வுகளில் சிறப்புரை ஆற்றினர், அந்தந்தக் கலை பண்பாட்டு செயற்பாட்டாளர்கள், உறுப்பினர்கள் கவிதாஞ்சலி வழங்கினர். விடுதலைப் பாடல்கள், எழுச்சிப் பாடல்களுக்கான நடனங்கள் சிறப்பிடம் பெற்றன. 'தேசத்தின் குரல்' அவர்களின் மறைவையொட்டி வெளியான பாடல்களுக்கான நடனங்கள் முக்கியமாக இங்கு குறிப்பிடப்பட வேண்டியவை. சகல நிகழ்வுகளும் கனடிய தேசியக் கொடி, தமிழர் தாயகக் கொடி ஏற்றலுடன் ஆரம்பாகி, அவைகளை இறக்குவதுடன் முடிவுற்றது. நிகழ்வுகளின் சில காட்சிகளை ஒளிப்படங்களாக இங்கு காணலாம்



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் பதிவு

# கெருடாவில் மக்கள் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல்










கெருடாவில் மக்கள் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல் கடந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற்றது. நிவாரணம்-9 திநி சேகரிப்புக்கு அன்பளிப்பாக 3000 டாலர் வழங்கப்பட்டது. ஒன்றிய உறுப்பினர்கள் குடும்ப அங்கத்தவர்களின் நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெற்றன. கனடா செல்வச்சந்நிதி ஆலய புவனேந்திர ஐயர் அவர்கள் முதன்மை அதிதியாக கலந்து உரையாற்றினார்.

---


## Accreditation Assistance Access Centre
**For Internationally Trained Professionals & Trades People**

ரொறொன்ரோ பெரும்பாக மக்களுக்குப் பின்வரும் விடயங்களில் இலவச ஆலோசனைகளை வழங்குகின்றோம்

- வெளிநாட்டுப் பட்டப் படிப்புக்கள், டிப்ளோமாக்கள் போன்றவற்றை மதிப்பிடுதல்
- தொழில் புரிவதற்கான அனுமதியும் அத்தாட்சிப்படுத்தலும்
- தகைமைப்பேறு பெறுகைக்கான செயற்பாடுகள்

பின்வரும் இரு நிலையங்களில் இச்சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

யோர்க் பிரதேசம்
**1118 Centre Street, Unit 23**
**Thornhill, On L4J 7R9**
**Tel: 905 – 762 0578**
**Fax: 905 – 762 0610**
**Email: aaac@socialenterprise.ca**

ஸ்காபரோ
**2100 Ellesmere Road, Suite 120**
**Scarborough, On M1H 3B7**
**Tel: 416 – 439 4369**
**Fax: 416 – 439 4372**
**Email: aaacscarborough@socialenterprise.ca**

**EMPLOYMENT ONTARIO** Employment Ontario programs are funded in part by the Government of Canada




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடாவில் குடும்பங்கள் பிளவுபடுவதால், நாட்டின் சூழல் சுற்றாடல் பெரிதும் பாதிப்படைவதாக ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. ஒன்றாக வசித்தவர்கள் தனித்தனி வீட்டு வசதி நாடிச் செல்கையில், வாகனங்களின் தொகை அதிகரிப்பு, எரிபொருள் பாவனை அதிகரிப்பு, குப்பை கூழங்கள் அதிகரிப்பு, படுக்கை மற்றும் தளபாடங்கள் அதிகரிப்பு என்பவற்றால் சுழல் மாசுபடுவதாகவும் சுற்றாடல் பாதிக்கப்படுவதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

ஒன்றாறியோவில் ஜி1 வாகன சாரதி லைசன்சுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்களின் நடைமுறைச் சட்டங்களை நெறிப்படுத்திச் சீராக்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் முதற் கட்டமாக மேற்படி பயிற்சி வழங்கி வந்த 23 நிலையங்களின் அனுமதி ரத்துச்செய்யப்பட்டுள்ளது. ஜி1 வாகன அனுமதியிலிருந்து ஜி2 தரத்துக்குச் செல்வதற்கான தகுதிகண் காலம், வகுப்பறைப் பயிற்சி, சாரதிப் பாட விதானம் போன்ற விடயங்களிலும் சில மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சாரதி லைசன்ஸ் வழங்கலில் ஊழல் இடம்பெறாமலிருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஒன்றாறியோ மாகாணத்தில் தொழில் புரியும்போது காயமடைபவர்களுக்கான கொடுப்பனவில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு 2008 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.. 2007 யூலை முதலாம் திகதி கொண்டு வரப்பட்ட இரண்டரை வீத அதிகரிப்புக்கு மேலாக இன்னொரு இரண்டரை வீத அதிகரிப்பு இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து வந்துள்ளது. மேலும மற்றொரு இரண்டரை வீத அதிகரிப்பு 2009 ஜனவரியில் வருமென்று ஒன்றாறியோ மாகாண அரசு அறிவித்துள்ளது.

ஒன்றாறியோ சுவடுகள் திணைக்களத்திலிருந்து தேசிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நூற்றுக்கணக்கான ஆவணங்களும் பொருட்களும் குறுகிய காலத்தில் களவு போயுள்ளன. திணைக்களத்தின் ஆவணப்படுத்தல் பதிவேடு சரியான முறையில் பதிவுகளை மேற்கொள்ளாமையினால் கனவுகள் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளது என்று மாகாண கணக்காளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையை இரண்டாகப் பிரித்து தனித்தனிச் சபைகளாக்குவது பற்றி இப்போது ஆலோசிக்கப்படுகின்றது. ரொறன்ரோஸிலிருந்த ஆறு நகர கல்விச் சபைகளை இணைத்து தற்போதைய மாவட்ட கல்விச் சபை உருவாக்கப்பட்டது. கனடாவிலேயே மிகப் பெரிய கல்விச் சபையாக இது விளங்குவதுடன், இரண்டரை லட்சம் மாணவர்களை நிர்வகித்து வருகின்றது. இதனால் இதன் வேலைப் பளுவைக் குறைக்கவே, இதனை இரண்டாக்க ஆலோசிக்கப்படுகின்றது.

ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள வைத்தியசாலைகளில் வருடமொன்றுக்கு ஆகக்கூடிய மரணங்கள், ஹம்பர் றிவர் றீஜனல் வைத்தியசாலையில் நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் இங்கு 136 நோயாளிகள் மரணமாகியுள்ளனர். தேசிய ரீதியான கணக்கெடுப்பில் மாதங்களில் ஆகக்கூடிய இடத்தில் கிச்சினர் கிராண்ட் றிவர் வைத்தியசாலை முதலிடத்தில் உள்ளது. இங்கு ஒரு வருடத்தில் 142 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குச் சட்டவிரோதமாகப் புக முயன்ற பெருந்தொகையானவர்கள் கடந்த இரண்டு மாதத்தில் அமெரிக்க எல்லைக் கடமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். திட்டமிட்ட சில குழுவினர் பணம் பெற்று இவர்களை வாஷிங்டன் ஊடாக அமெரிக்கா கடத்த முனைந்துள்ளதாகக் கூறும், அதிகாரிகள், தென்கொரிய நாட்டவர்கள் கூடுதலாக அகப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். தற்போது இப்பகுதிகளில் கூடுதலான எல்லைக் கடவை அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ரொறன்ரோ நகர வீடுகளின் உரிமையாளர்கள் இந்த ஆண்டில் சொத்து வரியாக மேலதிகமாக மூன்று முதல் நான்கு வீதம் வரை செலுத்தவுள்ளனர். ரொறன்ரோ நகர சபை அதிகாரபூர்வமாக இதனை அறிவித்துள்ளது. சொத்து வரி மேலும் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டதாயினும், ஒன்றாறியோ மாகாண அரசு கணிசமான தொகையைக் கடைசி நேரத்தில் ரொறன்ரோ நகர சபைக்கு வழங்க முன்வந்தமையால், வரி அதிகரிப்புக் குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகும் ஆரோக்கியமும்

## பெண்கள கட்டாயமாக உண்ண வேண்டிய ஏழு வகை உணவுகள்

ஹார்வார்ட் மருத்துவக் கல்லூரியின் ஆய்வொன்று சத்துள்ள உணவுகளை தமது தினசரி உணவுகளில் ஒழுங்காக எடுத்துக் கொள்ளும் பெண்கள், தமக்கு வரக்கூடிய இறப்பைக் கொண்டுவரக்கூடிய ஆபத்தான இருதய நோய்கள், புற்றுநோய்கள் போன்றவற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்கிறது.

1. பெரி பழங்கள் (Berries): எல்லா உணவு வகைகளையும் விட பெரீ பழங்கள் அன்ரியொக்சிடன்ஸ் எனப்படும் நோய்களிலிருந்து பாதுகாக்கும் சத்துகளை அதிகளவில் கொண்டுள்ளன. எந்த வகையான பெரி பழமாயினும், புதியதோ அல்லது குளிரூட்டியில் பாதுகாக்கப்பட்டதோ எதுவாயினும், கிழமைக்கு குறைந்தது 3 தடைவகளாவது ஒரு கிண்ணம் உணவில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இவை அதிகளவில் பைபர் சத்தினையும் கொண்டிருப்பதால் எடை கூடுவதை தடுப்பதிலும் பங்கெடுக்கும்.

2. சல்மன் மீன் (Salmon): சல்மன் மீன் ஒமேகா 3 எனப்படும் நல்ல கொழுப்புச் சத்தினை கொண்டிருப்பதால் இருதய நோய்களிலிருந்து பாதுகாப்பளிப்பதுடன் கூடிய பலன்களையும் தரக்கூடியது. 3 அவுன்ஸ் சல்மன் மீனில் நாளாந்தம் உங்களுக்குத் தேவையான B12 உயிர்ச்சத்தில் 170 வீதமும், உயிர்சத்து D இல் 80% வீதமும் கிடைக்கிறது. வாரத்திற்கு இரு முறையாவது உணவில் சல்மன் மீனைச் சேர்த்துக் கொள்ளுங்கள். தாவர உணவுகளை மட்டுமே சாப்பிடுபவராயின், ஒமேகா 3, DHA என அழைக்கப்படுகிறது. இது சோயா பால், மற்றும் சிலவகை தயிர்களில் கிடைக்கும்.

3. பச்சை இலைவகைகள்: பச்சை இலைவகைகள் இல்லாமல் உங்களுக்குத் தேவையான சத்துக்களை முழுமையாகப் பெற்றுக் கொள்வதென்பது முடியாத காரியம். கீரை, கொலார்ட் இலை, சலாட் இலை போன்றவை முக்கியமானவை. அவற்றில் பெருமளவில் பைபர், உயிர்ச்சத்துகள் C, K, மற்றும் போஃலிக் அமிலம் (ஒருவகை B உயிர்சத்து, இருதயத்தையும், ஞாபகசக்தியையும் பாதுகாப்பதுடன் பிறப்பில் ஏற்படக்கூடிய குறைபாடுகளை எதிர்க்கக் கூடியது), லுரின் (lutein) எனப்படும் கண்பார்வையை பாதுகாக்கும் சத்து, மிக முக்கியமான நான்கு தாதுப்பொருட்களான கல்சியம், மக்னீசியம், இரும்பு, பொட்டாசியம் ஆகியவற்றை கொண்டுள்ளன.
ஒரு நாளைக்கு இரு முறையாவது உட்கொள்ளல் நலம். கூடிய பச்சை நிறம் நல்லது.

4. முழுத் தானியங்கள்: சுத்திகரிக்கப்பட்ட தானியங்களை விட, முழுத் தானியங்களில் 96 வீதம் அதிகளவில் பைபர், மக்னீசியம், துத்தம், குரோமியம் ஆகிய தாதுப் பொருட்களும், E மற்றும் B6 உயிர்ச்சத்துகளும் கிடைக்கின்றது. இருதய நோய்கள், புற்றுநோய்கள், நீரிழிவு, இரத்த அழுத்தம், நிறை உயர்தல் போன்றவைகளிலிருந்து பாதுகாக்கும். குறைந்தது ஒரு நாளைக்கு மூன்று தடவைகளாவது உணவில் சேர்ப்பது நல்லது.

5. விதைகள் (Nuts): புரதம், மக்னீசியம், B மற்று E உயிர்ச்சத்துகள் இவற்றில் மிகக் கூடியளவில் காணப்படுகின்றன. இவை இருதய நோய்கள், புற்றநோய்களை எதிர்ப்பதில் நம்பப்பட்டவையாகும். இவற்றில் கொழுப்புச் சத்து காணப்பட்டாலும், அவை இருதயத்திற்கு நல்ல கொழுப்பு வகைகளாகும். வாராந்தம் 5 தடவைகள் ஒரு கையளவு சேர்த்துக் கொள்ளல் நலம்.

6. மஞ்சள் நிறமான காய்கறிகள்: பைபர் நிரம்பிய, நல்ல மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறமான காய்கறிகள், புற்றுநோயை எதிர்க்கத் தேவையான பீற்றா கரற்றீனை நாளாந்தம் தேவைப்படும் அளவில் 5 மடங்கு கொண்டுள்ளன. தடிமன் மற்றும் தொற்றுநோய்களை எதிர்க்கக் கூடியது. சூரிய ஒளியின் தாக்கத்திலிருந்து தோலினைப் பாதுகாக்கும் தன்மையுடையது. இவற்றில் காணப்படும் பொட்டாசியமானது இருதய துடிப்பை சீராக வைத்திருப்பதுடன், இரத்த அழுத்தத்தையும் குறைக்கும். தினசரி 2 தடவைகள் உணவில் சேர்த்தல் நலம்.

7. தயிர்: குறைந்த கொழுப்புள்ள அல்லது கொழுப்பேயில்லாத தயிர் வகைகள் மிக நல்லது. மிகச் சிறந்தளவில் உயிர்ச்சத்து B யும், புரதம், கல்சியம் என்பனவும் காணப்படுகின்றன. முக்கியமாக புரோபையோரிக்ஸ் எனப்படும் ஆரோக்கியமான பக்றீரியா வளர்ச்சிகளைக் கொண்டுள்ளது. அவை நோய்களையுண்டாக்கும் கிருமிகளை உடலிலிருந்து அகற்ற உதவும். வாராந்தம் நான்கு அல்லது அதற்கும் கூடவாக பாவிக்கலாம் - இதுவே உங்கள் முக்கிய பாலுணவாக இருந்தால்.

ஹார்வார்ட் ஆராய்ச்சியாளர் ஒருவரின் கூற்றுப்படி, பல்வகை உணவு வகைகளைக் கொண்ட குறைந்த கலோரிகளையும் கூடியளவு சத்துக்களையும் கொண்ட உணவுகளை உட்கொண்டால் உண்மையான வயதிலும் நான்கு வயது வரை குறைவாக அதாவது இளமையாக இருப்பீர்கள்.

யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public

Real Estate Law
Residential & Commercial
Business Law

Tel: 416 265 3456 Fax: 416 265-2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்*

எஸ். பத்மநாதனின் தொடர் 17

# சிட்டுக்களே வாருங்கள்!

ஒவ்வொரு தடவையும் மாமா மனதில் உதிக்கும் எண்ணங்களை உங்களுக்கு சுவைபட கூறிவந்துள்ளார். அதிலுள்ள நல்ல குறிப்புரைகள் உங்கள் சிந்தனையை கிளறியிருந்தால் மாமாவுக்கும் மகிழ்ச்சிதான். பாடசாலைப் படிப்பு, பரீட்சை, நண்பர்களுடன் விளையாட்டு என எத்தனையோ சம்பவங்களில் உங்களை இணைத்துக் கொண்டு குதூகலித்திருப்பீர்கள். எனினும், உங்கள் பெற்றோர்களை திருப்திப்படுத்தும் போதுதான் உண்மையான குதூகலம் பிறக்கிறது என்பதனை அன்பான சிட்டுக்களே உணர்ந்து கொள்ளுங்கள்.

அது என்ன மாமா இப்படி மொட்டையாக கூறிவிட்டாரே! என்னதான் இதில் அடங்கியுள்ளதோ என்று அவசரப்பட்டு கேட்டு விடாதீர்கள். உண்மையைக் கூறப் போனால் மாமாவுக்கு கூட ஒளவைப் பாட்டியின் வரிப் பாடலைப் படித்த பின்புதான் நன்றாக விளங்கியுள்ளது. சிட்டுக்களாகிய உங்களுக்கு எத்தனையோ கல்வியலாளர்கள் நூல்களை எழுதியுள்ளனர். எனினும், எமது மூதாட்டி ஒளவையின் சுருங்கிய வரிக்குள் விரிந்த பொருள் போன்று எங்கும் மாமாவால் காண முடியவில்லை. கண்களை மூடிக் கொண்டு "அறம் செய விரும்பு" என்று ஆத்திசூடி பாடல்களையும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கொன்றை வேந்தன் பாடல்களையும் மனனம் செய்திருப்பீர்கள். மிகவும் நீண்ட காலத்திற்குப் பின்பு மீண்டும் மிகவும் ஆறுதலாக பொருளையும் சேர்த்துப் படித்த வேளை மாமாவின் மனம் வியப்பால் விரிந்து போனது. அந்தப் பாடல் வரி இதுதான். 'ஏவா மக்கள் மூவா மருந்து', - 'Child obedient without command, is ambrosia' என்பது அது.

ஒளவைப்பாட்டியின் அற்புதமான சிந்தனைகளை Or Johnrew Bisset, Sudagen, Dr-Br-Danapalakrishnan, D. Ganesan ஆகியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். எனினும், மாமாவுக்கு மேற்படி வரிகளின் அர்த்தம் நன்றாக படித்தபோது தான் புரிந்து கொண்டது. "நாம் கேட்காமலேயே எம் பிள்ளைகள் நாம் வேண்டியதை செய்தால் அமிர்தம் பருகிய இன்பத்தினை பெறுகிறோம்" என்பது தான் மேல் உள்ள வரிகளின் அர்த்தம். எவ்வளவு அர்த்தமுள்ள நிலையிலுள்ள கருத்துக்களை இதில் காண முடிகிறது!

சிட்டுக்களே! உங்கள் பெற்றோர்கள் வேலை செய்துவிட்டு களைத்துப்போய் வருவார்கள். அப்போது அவர்களுக்கு தேநீரை வழங்குகின்றீர்கள் என்றால் அவர்கள் மெய்சிலிர்த்துப் போவார்கள். தேநீரும் அமிர்தம் தான் நீங்களும் அமிர்தம் தான். எமது மண்ணில் இப்படி காட்சியை மாமா காண முடிவதில்லை. தம்பி இதனை எடுத்து வையுங்கோ' என்ற கட்டளைக்கு பதில் கூறாமல் செல்லும் சிட்டுக்கள், தங்கச்சி கொஞ்சம் வீட்டை துப்பரவு செய்யுங்கள் என்றால் பள்ளிக்கூட வேலை உள்ளதென்று சிணுங்கும் சிட்டுக்களையும் தான் காண முடிகிறது. ஒளவைப் பாட்டியின் சிந்தனை எவ்வளவு தெளிவானது. கேட்டு செய்வதனை விட கேளாமலேயே செய்யும் போது எவ்வளவு ஆனந்தம் பிறக்கிறது! ஆங்கிலேயர்கள் கூட மனம் சொக்கி போயுள்ள இந்த கருத்தில் நாம் ஆழ்ந்து போகவில்லை!

அன்பான சிட்டுக்களே! பல நூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ஒளவைப் பாட்டியின் இந்த மருந்தினை நீங்களும் உட்கொள்ளுங்கள்; பெற்றோர் சொற்கேட்டு நடவுங்கள்; கீழ்ப்படிந்து வாழுங்கள், அவர்கள் கேட்காமலே எதையும் செய்யப் பழகுங்கள். நீங்களும் அமிர்தமாவீர்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

**COMPUTERIZED ACCOUNTING**

**JOB OPPORTUNITIES**
- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

**MEDICAL OFFICE ADMIN (MOA)**

**JOB OPPORTUNITIES**
- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

**BUSINESS ADMINISTRATION**

**JOB OPPORTUNITIES**
- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

**NETWORK ENGINEERING**

**JOB OPPORTUNITIES**
- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
**We welcome:**
- ☐ Social Assistance receipients
- ☐ EI - currently receiving / received receipients
- ☐ Maternity benefits received receipients

# Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

17

# வெள்ளிப் பணம் - டாலர்


2007 ஆண்டுக்கு விடை கொடுத்து 2008 ஆண்டுக்குள் காலடி எடுத்து வைத்துள்ளோம். 2007 ஆண்டில் உங்கள் பொருளாதார முன்னேற்றம் எப்படியாக இருந்தது? என்பதினை நீங்கள் மீள்பார்வை செய்து பார்ப்பதன் மூலம் 2008 ஆண்டுக்கான சில முன்னேற்பாடுகளை செய்து கொள்ள உதவியாக அமையும். கடந்த ஆண்டில் உங்கள் வருமானம் எப்படியாக இருந்தது. செலவுகள் வருமானத்துக்குட்பட்டு இருந்ததா? காரணங்கள் என்னவாக இருந்தது. அப்படியான காரணங்கள் எமது கவலையீனத்தால் ஏற்பட்டதா? அல்லது எதிர்பாராத காரணத்தினால் ஏற்பட்டதா? போன்ற வினாக்களை தொடுத்து பதில்களை கண்டறிய முயல்வதில் மூலம் 2008 ஆண்டு நீங்கள் உங்கள் நிதி நிலைமைகளை சரியான பாதையில் வழிநடத்திச் செல்ல முடியும். ஒவ்வொரு மனிதனும் தன்னைப்பற்றி ஒரு சுய மதிப்பீடு செய்வதன் மூலம் தான் அவன் முன்னேற்றப் பாதையில் காலடி எடுத்து வைக்க முடியும்.

இன்றைய எமது வாழ்வின் ஒவ்வொரு நகர்வுகளும் வெள்ளிப் பணத்துடன் (Dollar) தொடர்புடையதாகத்தான் அமைகின்றது. இதனால் தான் சமூக சிந்தனையாளர்கள் "மனிதநேயம் மரணித்துவிட்டது" என ஒப்பாரி வைக்கிறார்கள். இதன் கூற்றை ஆய்வு செய்வதல்ல இக் கட்டுரையின் நோக்கம். யதார்த்த ரீதியாக வெள்ளிப் பணத்தின் முக்கியத்துவத்தினை உணர வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனை சரியாக புரிந்து கொள்வதன் மூலம் தான் தொடர்ந்துவரும் விடயங்களை கவனத்தில் கொள்ள முடியும்.

அன்பான 'தமிழர் தகவல்' வாசகர்களே தரமான எமது வாழ்வின் தேவைகளுக்கு தேவையான தகவல்களை தந்து கொண்டிருக்கும் சஞ்சிகையின் இந்த ஆண்டின் முதலாவது இதழின் இந்த வெள்ளிப்பணம் என்னும் கட்டுரைத் தொடரில் நாம் எம்மை சில கேள்விகள் கேட்பதன் மூலம் சரியான முறையில் எமது பொருளியல் வாழ்வினை சரியாக நகர்த்திச் செல்ல முடியும்.

(1) உங்கள் உடல் ஆரோக்கியம் முக்கியம் என்பதினை உணர்கிறீர்களா?
(2) உடல் ஆரோக்கியத்தினை பேணுவதற்கான அடிப்படை தகவல்களை பெற்று இருக்கிறீர்களா?
(3) நீங்கள் செய்யும் தொழிலை மன மகிழ்ச்சியுடன் செய்கிறீர்களா?
(4) வருமானத்துக்கு ஏற்ப செலவுகளை கட்டுப்படுத்தி வாழ்க்கையை நடத்துகின்றீர்களா?
(5) கடன் அட்டையை (Credit Card) சுய கட்டுப்பாட்டுடன் பயன்படுத்த தெரிந்து கொண்டீர்களா?
(6) குடும்ப வரவு செலவுகளை குறித்து வைக்கும் பழக்கம் உண்டா?
(7) சேமிப்பு, முதலீடு, வருமானவரி போன்ற விடயங்களை அறிந்து வைத்துள்ளீர்களா? அல்லது அறிய முயற்சித்துள்ளீர்களா?
(8) கனடிய உலக பொருளாதார சமூக, அரசியல் விடயங்களை அறிவதில் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றீர்களா?
(9) உங்கள் தேவைகளில் எது அத்தியாவசியமானது, எது ஆடம்பரமான தேவை என்பதினை சரியான முறையில் பகுத்து அறிந்து கொள்ள முடிகின்றதா?
(10) நேரத்தினை சரியான முறையில் (Time Management) பயன்படுத்த தெரிந்து வைத்துள்ளார்களா?

மேற்கூறப்பட்ட 10 கேள்விகளையும் எம்மை நாம் எமது மனச்சாட்சிக்கு நேர்மையாக கேட்டு எந்த கேள்விக்கு நாம் இல்லை என்று பதில் கூறுகின்றோமோ அதனை குறைபாடாக கருதி நிவர்த்தி செய்வோம். இதன் மூலம் நாம் எம்மை ஒரு படிமுறை வளர்ச்சிக்கு இட்டுச் செல்ல முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பித்தோருக்கு..**

குறிப்பிட்ட நேரத்திலேயே விழாவினை ஆரம்பிப்பதாக சூளுரைத்திருந்தார். ஆகவே இனி வீடு போய், விழா மண்டபத்திற்குச் செல்வதற்கு நேர அவகாசம் இல்லை. நேரே மண்டபம் செல்கிறோம் என்றார். சாப்பாட்டுப் பிரியனான நான் வயிற்றைத் தடவினேன். கவலைப் படாதீர்கள் உணவும் கொண்டு வந்துள்ளேன். சாவகாசமாக உணவு உட்கொண்ட பின்னர் உடை மாற்றுதற்கும் அங்கே போதிய வசதி உண்டென்றார். பிறகென்ன, எல்லாம் கச்சிதமாக நடந்தன. அங்கே அவரது மனைவி பவானியும், ஆன்மீகச் செம்மல் புவனேந்திரனும், விழா ஒருங்கிணைப்பாளர் சக்திவேலும் எமக்காகக் காத்திருந்தனர். சொன்னபடி நேரத்திற்கு விழாவினை ஆரம்பித்தார். சிலர் 300 கிலோமீற்றர் தொலைவிலிருந்தும் வந்திருந்தார்கள் என்ற செய்தி மனதை உருக்குவதாக அமைந்திருந்தது.

எனது 'திறவுகோல்' நூலினை திரு இராமநாதன் வெளியிட்டு வைக்க திருமதி நகுலா சிவநாதன் ஆய்வு செய்தார். திருமதி விக்னா பாக்கியநாதன் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். எனது நூல் வெளியீட்டு நிகழ்வு என்ற போதிலும் அன்றைய தினம் முத்தாய்ப்பாக நிகழ்ந்த நிகழ்ச்சி 'பெற்றவர் கற்ற முற்றம்' எல்லோரதும் பாராட்டினைப் பெற்றது. இதனை செயற்படுத்திய சிவகுமாரனை எத்தனை பாராட்டினாலும் தகும். தாயகத்தில் தமது பெற்றோர்கள் கற்ற 12 பாடசாலைகள் பற்றிய சரித்திரம் மற்றும் இன்றைய நிலைமை பற்றி 12 மாணவர்கள் தூய தமிழிலே எழுதி எனது தலைமையில் வாசித்தார்கள். பலரை இது நெக்குருக வைத்த நிகழ்ச்சி என்றால் அது மிகையல்ல. அங்கு குழுமியிருந்த பெற்றோர்களுக்கு தமது பாடசாலைகள் மாத்திரமல்ல ஏனைய பாட-சாலைகள் பற்றியும் தெரிந்து கொள்ளக் கூடிய அற்புத நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. நிகழ்ச்சியைக் கண்டு பூரித்த எனது நண்பர் புத்திரசிங்கம் பிள்ளைகளுடைய தமிழ் ஆற்றலையும் பெற்றோர்கள் அவர்களுக்கு வழங்கிய ஒத்துழைப்பினையும் பெரிதும் பாராட்டினர். ஒரு நாள் ஜேர்மனியில் தங்கியிருந்தோம். தங்கியிருந்தோம் என்பதிலும் பார்க்கத் திருமதி பவானியின் விருந்தோம்பலில் மூழ்கித் திக்குமுக்காடி விட்டோம். மறுநாள் காலை சிவஸ்ரீ பாஸ்கரக் குருக்களின் அழைப்பின் பேரில் அவரால் நிறுவப்பட்டுள்ள காமாட்சி அம்பாள் ஆலயத்திற்குச் சென்றிருந்தோம். தனி ஒருவராக அந்த ஆலயத்தைக் கட்டியெழுப்பியதுடன் கல்யாண மண்டபம் ஒன்றினையும் நிர்மாணித்து வார இறுதி நாட்களில் தமிழ் சமயம் போதிக்கும் பாடசாலையையும் நடத்தி வருகிறார்கள். மூன்று மாதத்திற்கொருமுறை ஒரு சஞ்சிகையினையும் பிரசுரிக்கிறார்கள். தாயகத்திலே வவுனியாவிலே விடுதிச் சாலையுடன் கூடிய ஒரு பாட-சாலையையும் நடத்துதற்கான ஆயத்த வேலைகளை முடித்துள்ளார். அடுத்த வருடம் பாடசாலை இயங்கவுள்ளதாகக் கூறினார்கள். ஆலயத்திலே பாரிய நூல் நிலையமும் ஒன்று இருந்தது. குருக்களுக்கு நல்ல குரல் வளமும் இருந்தமையால் நிறையவே ஆங்காங்கே பூசை நடைபெறுகின்ற போது தோதான தேவாரங்களைப் பாடிக் கொண்டு ஆராதனை நடத்தினார். கேட்பதற்குச் சந்தோஷமாக இருந்தது. தமிழர்கள் மாத்திரமல்லாது ஜேர்மனியர்களும் ஆலயத்தில் தரிசனம் செய்வதைக் காண முடிந்தது. மதிய போசனம் இங்கேயே நமக்குக் கிடைத்தது.

27 மதியம் இலண்டன் திரும்பினோம். 250 புத்தகங்கள் எடுத்துச் செல்ல வேண்டும். நான் சக்கர நாற்காலிப் பிரயாணி. ஒவ்வொன்றிலும் 50 புத்தகங்கள் கொண்ட ஐந்து பெட்டிகள். ஒவ்வொரு பெட்டியும் 10 கிலோ நிறை. விமான கூடத்தில் நீண்ட தூரம் நடக்க வேண்டும். பாவம் இராமநாதன் கை வலிக்க வலிக்க காவி வந்தார். கூடவந்த குற்றத்திற்காக திருமதி விஜயலட்சுமி இராமநாதனும் கை கொடுத்தார். கை கொடுத்தார் என்பதிலும் பார்க்கப் பாரம் தூக்கிக் கொடுத்தார் என்பதே சாலப் பொருந்தும். இன்னும் மோசமாகாமல் நண்பர் புத்திரசிங்கம் இடையிடையே உதவிக்கு வந்தார்.

**இலண்டன் விழா:** 30ம் திகதி மாலை 7:00 மணிக்கு லூசியம் சிவன்கோவில் மண்டபத்தில், இலண்டன் மாநகரத்தில் 'திறவு கோல' அறிமுகம் நடைபெற்றது. எனது அபிமான மாணவரும் பல நல்ல முயற்சிகளுக்கு முன்னின்று உழைப்பவரும், இசைத்துறையிலும் சமயத்துறையிலும் அதீத நாட்டமுடையவருமான வைத்திய கலாநிதி சீ. நவரத்தினம் அவர்கள் விழாவினுக்குத் தலைமை ஏற்றுச் சிறப்பாக நடத்தினார்கள். ஆயுட்காலத் தமிழ்ச் சேவைக்காக ரொறன்ரோ இலக்கியத் தோட்டத்தின் 2006ம் ஆண்டு கௌரவம் பெற்ற பத்மநாத ஐயர் அவர்களும் கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளையினுடைய மகள் திருமதி மாதவி சிவலீலன் அவர்களும் நூலினை விமர்சித்தார்கள். விமர்சனங்கள் என்னைப் புளகாங்கிதம் அடைய வைத்தன. ஈழநாடு இராஜகோபால் அவர்களும், நண்பர் புத்திரசிங்கம் அவர்களும் என்னை வாழ்த்திப் பேசினார்கள். இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலயப் பிரதம குருக்கள் ஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள் அவர்கள் மிக்க தமிழ் அறிவுடையவர். அவர் வாழ்த்துரையில் அது பிரதிபலித்தது.

நான் மகாஜனக் கல்லூரியில் 1957ம் ஆண்டு மே மாதம் 26ம் திகதி முதல் காலடி வைத்த வகுப்பில் இருந்து ஆறு பேர்கள் வைத்திய கலாநிதிகள் ஆகியிருந்தனர். அவர்களில் வைத்திய கலாநிதி இராசநாதன் ஒருவர் மாத்திரம் ஐக்கிய அமெரிக்காவில் வாழ்கின்றார் - ஏனைய ஐவரும் இங்கிலாந்தில். துரதிருஷ்டவசமாகத் திருமதி சிவநேசம் காலமாகிவிட்டார். ஏனைய நால்வரில் பூபாலசிங்கம், நவரத்தினம், கருணாகரன் ஆகிய மூவரும் என் நூல் வெளியீட்டிற்கு வந்தது என்னை பெரிதும் மகிழ வைத்தது. நான்காமவர் பாலசந்திரன் அவர்கள் அன்றைய தினம் அறுவைச் சிகிச்சை ஒன்று செய்ய வேண்டியிருந்தமையால் மறுநாள் வந்து சந்தித்தார். ஆசிரியத் தொழிலுக்கு இதைவிடப் பெருமை தருவது எது? அதே போன்று நான் பாடசாலையை விட்டு விலகிய ஆண்டிலே இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலைகளுக்கிடையான உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய "Singer Schield" பெற்றவர்களில் அன்றைய தினம் மூவர் வந்திருந்து என்னைக் கௌரவித்தனர்.

மேற்படி விழாவினை ஒழுங்கு செய்தவர்கள் அம்பனை கலைப் பெருமன்றத்தினைச் சேர்ந்தவர்கள். மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சார்பில் இந்த வெளியீட்டினை நடத்த நான் விரும்பவில்லை. கல்லூரியைச் சார்ந்த வேறு பல எழுத்தாளர்கள் உள்ளனர். நான் தொடங்கி வைத்தால் அது சங்கிலித் தொடர் போல வரலாம். பழைய மாணவர் சங்கத்தினருக்கு இது பிரச்சனையாக அமையலாம். ஆனாலும் பழைய மாணவர் சங்கத்தினரே தான் இதனை நடத்தினர். இராமநாதன் முக்கிய பங்கேற்றார். அவருக்கு உறுதுணையாக நின்றவர்கள், தயாளன், ஸ்ரீகெங்காதரன், சபேசன் அங்கயற்கண்ணி ஆகியோர். இவர்கள் யாபேரும் என்றும் என் முயற்சிகளுக்கு உறுதுணையாய் நிற்பவர்கள். வந்த இடத்தில் சும்மா ஏன் நிற்பானேன் என்று எமது நூற்றாண்டு விழா நிதியத்திற்கும் உதவுமாறு வேண்டினேன். வைத்திய கலாநிதி தில்லைநாதனும், E.M குமார் அவர்களும் ஆளுக்கு 1000 பவுண் உதவியதுடன் மேலும் தருவதாக வாக்களித்தனர்.

எனது உற்ற நண்பர் சீவரத்தினம் அவர்கள் இலண்டன் மாநகரில் முத்துமாரி அம்மன் திருக்கோவிலை மிகத் திறமையாக நிர்வகித்து வருகிறார். என்னைப் பார்க்க வேண்டும் என திரு இராமநாதனிடம் கூறியமையால் கெங்காதரன் என்னை அங்கு அழைத்துச் சென்றார். ஆலயம் மிகவும் தூய்மையாகவும் அழகாகவும் இருந்தது. அர்த்தநாரீஸ்வரர் உருவம் மிகவும் பெரிதாகக் காணக் கூடியதாக இருந்ததுடன் நான் முதல் முதலில் பெரிய அளவிலான மரகத இலிங்கத்தினையும் அங்கே தான் கண்டேன். மிகவும் அழகாக இருந்தது. நான்கு இலிங்கங்களை நான்கு புறமும் வைக்கவுள்ளதாக சீவரத்தினம் அவர்கள் கூறினார்கள். எனது நூலுக்கு அன்பளிப்பாக ஒரு தொகையினையும் எனது மகள்களை கட்டிப் பணிக்குமாறு தங்கத் தாயத்துகளையும் தந்து ஆசீர்வதித்தார். ஆலயத்தை மிகவும் சிறப்பாக நடத்துகிறார். இதனால் அரசாங்கத்துடன் இடையிடையே சர்ச்சைகள் ஏற்பட்டாலும் அவர் கிறுங்குவதில்லை.

**புத்தூர் கலைவிழா:** 2ம் திகதி மாலை புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரிக் கலைவிழா. என்னைப் பிரதம விருந்தினராக அழைத்திருந்தனர். எனது வாழ்க்கையில் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி என்றுமே மறக்க முடியாதது. இன்னும் சொல்லப் போனால் எனக்குப் புகழ் தேடித் தந்தது அக் கல்லூரியே தான். பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அந்த அளவினுக்கு என்னைத் தெய்வமென மதித்தனர். (மேலும்... 33ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 8

"முத்தமிழும் நான்மறையும் ஆனாய் கண்டாய்"

திருநாவுக்கரசர் வடமொழி தென்மொழி இரண்டையும் ஒன்றாகப் பார்த்தார் என்பதற்கு அவரது தேவாரங்களில் இடம்பெற்ற பாடல் வரிகள் சான்றாக அமைந்துள்ளன.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"

"முத்தமிழும் நான்மறையும் ஆனாய் கண்டாய்"

"தென்தமிழோடு ஆரியனைச் சீரியனை"

"ஆரியத் தமிழோடு இசை யானவன்"

திருநாவுக்கரசர் போலவே திருஞானசம்பந்தர் தமிழையும் வடமொழியையும் ஒன்றாகப் பார்த்தார் எனபது அவர் பாடிய தேவாரப் பாடல்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

"தம்மலரடி யென்று அடியவர் பரவத்
தமிழ்ச்சொல்லும் வடசொலுந் தரணிமேற் சேர
அம் மலர்க் கொன்றை யணிந்த எம் அடிகள்
அச்சிறுபாக்கம் ஆட்சி கொண்டாரே."

"செந்தமிழர் தெய்வமறை நாவர் செழு நற்கலை தெரிந்த அவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்"

"தென்சொல் விஞ்சமர் வடசொற்றிசைமொழி எழில்நரம் பெடுத்துத்
துஞ்சுநெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு தொல்புகலூர்"

"செந்நிறத்த தமிழோசை வடசொல்லாகித்
திசை தான்குமாய்த் திங்கள் ஞாயிறாகி"

"செந்தமிழில் தெய்வ மறை நாவர் ... அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்" என்று பாடுவதன் மூலம் சம்பந்தர் காலத்தில் திருக்கோயில் வழிபாடு செந்தமிழில் இருந்ததை உணர்ந்து கொள்ளலாம்.

சம்பந்தர் - அப்பர் காலத்தில் தான் தமிழ்நாட்டில் சைவம் தழைத்தோங்க கால்கோள் இடப்பட்டது. புறச் சமயங்களான சமணம் - பவுத்தம் புறங்காணப்பட்டன.

வேதியர் குலத்தில் பிறந்த சம்பந்தர் வேத வேள்வி நடத்தும் முறைகளை மாற்றினார். வேள்வியில் குதிரை, ஆடு, மாடு போன்றவற்றை கொன்று பலி கொடுக்கும் உயிர்க் கொலையைத் தவிர்க்கச் செய்தார். அதே சமயம் வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் பூத பரம்பரை பொலியவுமன் பாடுபட்டார். தனது தந்தையார் வேள்வி செய்வதற்கு பொன் வேண்டித் திருவாவடுதுறையில் பதிகம் பாடி ஆயிரம் பொன் நிறைந்த பொற்கிழி பெற்றார் எனப் பெரிய புராணம் செப்புகிறது.

இருந்தும் சமய தளத்தில் சம்பந்தர் ஒரு புரட்சியைச் செய்தார். வேதநெறி விதைத்த சாதியை புறந்தள்ளினார். சைவ சமயம் தீண்டப்படாதோர் பட்டியலில் போட்டு வைத்த திருநீலகண்ட யாழ்ப்பாணத்தாரை தம்முடன் திருத்தல யாத்திரையின் போது உடன் கூட்டிச் சென்று தேவாரங்கள் பாடப்படும் போது யாழ் வாசிக்கச் செய்து மகிழ்ந்தார்.

இவ்வாறு ஆரியமும் தமிழும் ஒன்றென திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தேவாரப் பாடல்களில் ஆங்காங்கே கூறிச் செல்கிறார்கள்.

மொழி அடிப்படையில் இல்லாது சமய தளத்திலும் இந்த ஆரிய - தமிழ்க் கலப்பினை தாங்கள் பாடிய தேவாரத்தில் சம்பந்தரும் நாவுக்கரசரும் வற்புறுத்தி இருக்கிறார்கள்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் ஆகியவையே வடமொழியில் உள்ள நால்வேதமாகும். அறம், பொருள், இன்பம், வீடு தென்மொழியில் உள்ள நால் வேதமாகும். இந்த இரண்டையும் அருளியவர் சிவபெருமான். இருவகை வேதங்களும் சொல்லும் பொருள் ஒன்றே என்பது சம்பந்தர் மற்றும் நாவுக்கரசர் கருத்தாகும்.

"தூய காவிரியின் நன்னீர் கொண்டு இருக்கு ஓதி ஆட்டி"

"சாமத்து வேதமாகி நின்றதோர் சம்புதன்னை"

"சாம வேதத்தார் எந்தையும் எந்தை தந்தையும் ஆய ஈசர்"

"வேதத் தோடாறங்கம் சொன்னார் போலும்"

"அருமறையோடாறங்கம் ஆய்ந்து கொண்டு பாடினார் நால்வேதம்"

"வேதியன் காண் வேதவிதி காட்டினான் காண்"

என்றும் வடமொழி வேதத்தை சிவபெருமான் அருளிச் செய்தார் என்று கூறும் நாவுக்கரசர் தென்மொழி வேதத்தையும் ஆலின் கீழ் இருந்து அருளிச் செய்தார் என்றும் கூறுகிறார்.

சிவபெருமான் ஆலின் கீழ் இருந்து அறம் உரைத்த செய்தியை பின்வரும் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

"ஆலின் கீழ் அறங்களெல்லாம் அன்றவர்க்கு அருளிச் செய்து
நூலின் கீழவர்க்கு எல்லாம் நுண் பொருளாகி நின்று."

"வருந்தின நெருந லின்றாய் வழங்கினர் நாளர், ஆல் கீழ்
இருந்தின பொருள்கள் நால்வர்க்கு இயம்பினர்."

"ஆலத்தார் நிழலில் அறம் நால்வர்க்குக்
கோலத்தால் உரை செய்தவன்."


"ஆலதன் கீழிருந்து நால்வர்க்கு அறம் பொருள் வீடின்பம்
ஆறங்கம் வேதம் தெரித்தானை."

இவ்வாறு ஆரிய வேதத்தையும் திராவிட வேதத்தையும் சிவபெருமான் முறையே வடமொழியிலும் தென்மொழியிலும் அருளிச் செய்தார் என்று சம்பந்தரும் நாவுக்கரசரும் பலகாலும் சொல்லிச் செல்கிறார்கள்.

(மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## என்றுமுள்ள செந்தமிழ்...

சம்பந்தர் மற்றும் நாவுக்கரசர் சிவபெருமான் ஆலமரத்தின் கீழிருந்து அறநெறியை அருளிச் செய்தார் என்ற நாயன்மார்கள் கூறுவது போலவே திருமழிசை ஆழ்வாரும் தாம் அருளிய நான்முகன் திருவந்தாதியில் (17) திருமால் -

"ஆல் நிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலை உகந்துரைத்தான் மெய்த் தவத்தோன் - ஞாலம்
அளந்தானை ஆழிக் கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான் வணங்கு மாறு."

என்கிறார்.

மெய்யான தவநெறியையுடைய சிவபெருமான் உலகத்தை அளந்தவனும் திருப்பாற்கடலில் கண் வளர்ந்தவனும் ஆலிலை மேல் துயில் கொண்டவனும் ஆன எம் பெருமானைத் தான் வழிபடும் வகையான அறநெறியை முன் யுகத்தில் ஓர் ஆலமரத்தின் நிழலில் நான்கு மாமுனிவர்களுக்கு உபதேசித்தார்.

எம்பெருமானை வழிபடும் நெறியை மாமுனிவர்களுக்குச் சிவபெருமானே உபதேசித்தான் என்றால் எம்பெருமானுடைய பரத்துவத்தைச் சொல்லவும் வேண்டுமோ?

அகத்தியர், புலத்தியர், தட்சர், மார்க்கண்டேயர் ஆகியோரே அந் நால்வர் ஆவர்.

வடமொழியும் தென்தமிழும் ஒன்று வடமொழிக்கு வேதம் தமிழிற்கு வள்ளுவனார் குறட்பா என வண்ணக்கஞ் சாத்தனார் என்ற புலவர் பாடியிருக்கிறார்.

"ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்(து) - ஆரியம்
சீரிய தென்தொன்றைச் செப்பரிதால் - ஆரியம்
வேதம் உடைத்து, தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து"

(திருவள்ளுவர் மாலை 43)

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி பாரதியார் தமிழ்த் தாயை "ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை ஆரிய மைந்தன் அகத்தியன் நிறைமேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்" என்கிறார்.

சைவம் வைணவம் இரண்டையும் வளர்க்கப் பாடுபட்ட அப்பரும் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையாரும் அருண்மணி வாசகரும் பன்னிரு ஆழ்வார்களும் செந்தமிழையும் வளர்த்தார்கள்.

சைவம் சரி, வைணவம் சரி இரண்டுக்கும் பக்தி இயக்க காலமே பொற்காலமாகும்.

பிற்காலத்திலேயே - ஆரிய மேலாண்மை வலுப்பட்ட பின்னரே - தென்மொழியும் வடமொழியும் ஒன்றென்ற நிலை மாறி தமிழ் நீஷ பாசை வடமொழி தேவ பாசை என்ற நச்சுக் கருத்து தமிழர்கள் மத்தியில் விதைக்கப்பட்டது.

இதனால் தேவார திருவாசகங்களைச் சோழ பாண்டிய நாடுகளிலுள்ள பிராமணர்கள் கூட பெரும்பாலும் "பண்டாரப் பாட்டுகள்" என்று ஒதுக்கி வைத்து விட்டார்கள். ஆதிசங்கரர் எழுதி வைத்த பாஷியங்களைப் போல் அவை போற்றப்படவில்லை.

அதனால் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உவப்பிலா ஆனந்தமயமான தேனினைச் சொரியும் - தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் - நாயன்மார்களது தேவார திருவாசகங்கள் கருவறைக்கு வெளியே தள்ளப்பட்டன.

பக்தி தலைக்கேறிய தமிழர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அது மட்டுமல்ல, இந்திய மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி சமஷ்கிருதம் என்ற கோட்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இருவர் - நமக்கு மூவர்
## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு
## 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

**புலம்பெயர்ந்தவர்களுக்கான**
**தமிழர் தகவலின் சிறப்புத் திட்டம்**

தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்தவர்களுக்கான சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் □ழந்தை பிறப்பு வீதம் வெ□வாகக் □றைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்□ப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்□ள் மூன்று □ழந்தைகளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்□விப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்□ இந்த ஊக்□விப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்□ம் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.


தமிழ்க் □ழந்தைகள் ஊக்□விப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1 திகதிக்□ப் பின்னர் திருமணமா□ம் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்□ முன்னர் எப்போது மூன்று □ழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு □ழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமா□ம் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்□ம் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் □டும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்□க்கூட மூன்று-நான்□ வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். □ழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்□விப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்□ப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.

**Jude**
**Anthonypillai** LL.B. (Canada)
Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
**416 332 8547**

**தொலைநகல்**
**416 332 8379**

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







**தொடர்புகளுக்கு:**

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்காட்டியின் வரலாறு..

மன்னன் எனக் கருதப்படும் நூமா பொம்புலியஸ் அதுவரை உபயோகிக்கப்பட்டு வந்த 10 மாதங்களைக் கொண்ட நாட்காட்டியில் ஜனவரி பெப்ரவரி ஆகிய மாதங்களை இணைத்து 355 நாட்கள் கொண்ட நாட்காட்டியை ஏற்படுத்தினார்.

3. ஆறு நூற்றாண்டு காலத்தின் பின்னர் யூலியஸ் சீசரின் ஆட்சிக் காலத்தின் போது அவர் கி.மு. 47 வருடத்தில் எகிப்துக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து றோமன் நாட்காட்டி முறையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என முடிவு செய்தார். எனவே அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த கிரேக்க எகிப்திய வானியல் நிபுணரான சோசியினஸ் என்பவரின் ஆலோசனைப்படி 365 நாட்கள் கொண்டதான வருடத்தை ஏற்படுத்தியதுடன் 4 வருடங்களுக்கு ஒரு முறை லீப் வருடம் என்னும் முறையையும் அறிமுகப்படுத்தினார். இதே சமயம் அதுவரை குவின்ரிலிஸ் (Quintilis) என அழைக்கப்பட்டு வந்த 7வது மாதம், யூலியஸ் சீசரைக் கௌரவிக்கும் முகமாக யூலியஸ் (யூலே) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

யூலியஸ் சீசர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் ஆட்சிபீடமேறிய ரோம் சக்கரவர்த்தி ஆகஸ்துஸ் சீசர், செக்ஸ்டிலிஸ் (Sextilis) என அழைக்கப்பட்டு வந்த 8வது மாதத்தை, தனது பெயரின் நினைவாக ஆகஸ்துஸ் என்று மாற்றம் செய்தார். அத்துடன் அவரது வேண்டுகோளின்படி பெப்ரவரி மாதத்தில் இருந்து ஒரு நாளைக் குறைத்து ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் அதிகரிக்கப்பட்டது. அதனையடுத்து பெப்ரவரி மாதத்தில் 29 நாட்கள் உள்ளன எனவும் ஆகஸ்ட் மாதத்தில் 31 நாட்கள் உள்ளன எனவும் முடிவு செய்யப்பட்டது.

### யூலியன் கலண்டர், கிறகெறியின் கலண்டர் - ஓர் ஒப்பீடு

யூலியஸ் சீசரின் ஆட்சிக் காலத்தின் போது உருவாக்கப்பட்ட யூலியன் கலண்டர் மிகவும் சிறந்த வானியல் நிபுணர்களான மதக் குருக்களினால் உருவாக்கப்பட்டதனால் அது ஓர் தரமான கலண்டர் என ஆதிக் கிறிஸ்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் அதில் சில குறைபாடுகள் இருந்தது என பின்னர் அவதானிக்கப்பட்டது. யூலியன் கலண்டர் முறையின்படி ஒரு வருட காலம் எனக் கணக்கிடப்பட்டுள்ள காலப் பகுதியில் மேலதிகமாக 11 நிமிடங்கள் 14 செக்கன்கள் உள்ளடக்கப்பட்டது என அறியப்பட்டது.

யூலியன் கலண்டரில் உள்ள இந்த குறைபாடு காரணமாக கி.பி. 1582 வரை வெவ்வேறு வருடங்களில் நாட்களின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் ஏற்பட்டன. மேலும் சிக்கல்கள் உருவாகுவதைத் தடுக்க வேண்டியதனை உணர்ந்த அச்சமயம் பாப்பரசராக இருந்து 13 கிறகெறி, சிறந்த அறிஞர்கள், மதகுருக்கள், விஞ்ஞானிகள், வானியல் நிபுணர்கள் என்பவர்களை உள்ளடக்கிய குழுவினரின் உதவியுடன் சில திருத்தங்களை உருவாக்கினர்.

இவ்வாறான மாற்றங்களுடன் உருவாக்கப்பட்ட புதிய கலண்டர் கிறகெறியன் கலண்டர் என அழைக்கப்பட்டது. இதில் சேர்க்கப்பட்ட திருத்தங்களின்படி 00 என்ற இலக்கங்களில் முடிவடையும் 4 நூற்றாண்டுகளில் மூன்றைத் தவிர நான்கு வருடங்களுக்கு ஒரு முறை லீப் வருடம் (Leap Year) உருவாகும் என முடிவு செய்யப்பட்டது. இதன் காரணமாக யூலியன் கலண்டரில் இருந்த குறைபாடு நீக்கப்பட்டு கிறகெறியன் கலண்டர் முறை தற்போது உலகம் எங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

* மேலே குறிப்பிட்ட மாற்றத்தின்படி 1600 வருடம் லீப் வருடம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.
* 1700, 1800, 1900 ஆகிய வருடங்கள் சாதாரணமான வருடங்கள் (Common years) என முடிவு செயயப்பட்டது.
* 2000 வருடம் மீண்டும் லீப் வருடம் எனத் தீர்மானிக்கப்பட்டது. லீப் வருடங்களை கணக்கிடுவதில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் காரணமாக கிறகெறியன் கலண்டர் காலத்தைக் கணக்கிடுவதற்கு மிகவும் சிறந்ததும், நம்பகத் தன்மையுடையதுமான கலண்டராக உருவாகியது.

ஐரோப்பாவில் உள்ள றோமன் கத்தோலிக்க நாடுகள் கி.பி. 1587 இல் கிறகெறியன் நாட்காட்டியை பயன்படுத்த ஆரம்பித்தன. ஆனால் றோமன் கத்தோலிக்கரல்லாத நாடுகள் தொடர்ந்து நீண்ட காலமாக யூலியன் கலண்டரையே உபயோகித்து வந்தன. 165 வருட இடைவெளியின் பிரிட்டிஷ் அரசு கிறகெறியின் நாட்காட்டியை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தன. கிறீஸ், ரஷ்யா, சோபியா, றோமானியா ஆகிய நாடுகளின் திருச்சபைகள் உத்தியோகபூர்வமான தேவைகளுக்காக யூலியன் நாட்காட்டியையே பயன்படுத்தி வருகின்றன. எனினும் உலகளாவிய ரீதியில் கிறகெறியன் நாட்காட்டியே காலத்தைக் கணக்கிடுவதற்கு மிகவும் சிறந்தது என பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

NLR ACCOUNTING AND TAX SOLUTIONS

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
416 888 1128
416 492 7973

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

**JRB Universal Inc.**

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

Motor Vehicle Accident

Criminal

வாகன விபத்து!

கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்.. உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்

416-803-5296

WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பித்தோருக்கு..**

நான் பாடசாலையை விட்டு மாற்றம் பெற்றுச் சென்றது அவர்களுக்கு மனவருத்தத்தைத் தந்தாலும் அவர்கள் காட்டிய அன்பு இன்றுவரை குறையவில்லை என்பது ஏறக்குறைய 30 வருடங்களுக்குப் பின்னர் இன்றும் கொழும்பிலேயும் இலண்டன் மாநகரத்திலேயும் என்னை அழைத்துப் பாராட்டுவதில் இருந்து உணர முடிந்தது. இலண்டனில் பிரபல தங்க மாளிகை உரிமையாளர் சிவசுந்தரம், சங்கத் தலைவர் திரு. பொன்னம்பலம், தமிழரசு சின்னத்துரையின் பிள்ளைகளாகிய வசந்தமாலா, வசந்தேஸ்வரன், மற்றும் ஞானசேகரம், அருணா தம்பதியினர் என்றும் என் நினைவில் நிற்க வேண்டியவர்கள்.

**சுவிஸ்லாந்து விழா**: 8ம் திகதி சுவிஸ்லாந்து சென்றோம். என்னோடு இணைபிரியாது நின்ற இராமநாதன் அங்கும் வந்தார். நாகலை 9:00 மணிக்கு விமானம் எடுத்தோம். 10:15க்கு சூரிச் விமான தளத்தில் இறங்கினோம். கணபதிப் பிள்ளையை எதிர்பார்த்த எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. கையும் மாலையுமாக தனபாலசுந்தரம் மனைவியுடனும் கணபதிப் பிள்ளையுடனும் நின்று வரவேற்புக் கொடுத்தார். அவர் நான் அதிபராக மகாஜனா புகுந்த ஆண்டு சேரன் மாணவர் தலைவராகிய பொழுது உதவித் தலைவராகியவர். மனைவி எனது உறவினர். ஆனால் அங்கே வசிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. மாலை 6:00 மணிக்கு விழா. எம்மை விடுதியில் ஓய்வெடுக்கப் பணித்துவிட்டு அவர்கள் சென்று விட்டார்கள். சிறிது நேரத்தில் அழைப்பு மணி அடித்தது புத்தூரில் என்னிடம் கல்வி கற்ற கிருஷ்ணா தனது குடும்ப சகிதமாக வந்தார். மறுநாள் நான் விமானம் ஏறும் வரை அவர் என்னை விட்டே அகலவில்லை. கணபதிப் பிள்ளை தனியொருவனாக எதனையும் சாதிக்கும் வல்லமை மிக்கவர். ஆகவே விழாவின் வெற்றிக்குச் சொல்ல வேண்டுமா? அதுவும் கிருஷ்ணாவும் உறுதுணையாய் நின்றார் என்றால் விழா மகோன்னத வெற்றி என்பதற்கு வேறு காரணம் வேண்டாமே. கிருஷ்ணா தலைமையில் விழா நடந்தது. கல்லாறு சத்தீசும் உரையாற்றினார். திரு. பெருமாள் விபரமாக ஆய்வுரை நிகழ்த்தினார். தமிழ் ஆர்வலர்கள் பலர் விழா முடிந்த பின்னரும் இரவு 2:00 மணிவரை உரையாடினர்.

மறுநாள் கிருஷ்ணாவும் கணபதிப் பிள்ளையும் சூரிச் விமானதளத்தில் எம்மை விமானம் ஏற்றிவிட மீண்டும் இலண்டன் மாநகரை வந்தடைந்தோம்.

**அவர்களுடன் எனக்குப் பிரச்சனையே:** என்னுடன் இறுதிவரை உடனிருந்தவர் திரு இராமநாதன் என்றேன். இன்னொருவரையும் சொல்ல வேண்டும். ஆம். நான் அங்கே கால்வைத்து முதல் இங்கு மீண்டும் கால் வைக்கும் வரை என்னுடன் ஒட்டிக் கொண்டு நின்றது "இருமல்". சிலசமயம் தொடர்ச்சியாக பல நிமிடங்கள் இருமுவேன். திருமதி பவானி, திருமதி புத்திரசிங்கம் எல்லோரும் கை மருந்துகள் தந்து என்னை மீட்டார்கள். வைத்திய கலாநிதி சிவா இருமல் கலவை, அன்ரிபயோற்றிக் என எல்லாவற்றையுமே குடி குடி எனக் குடிக்க வைத்துவிட்டார். ஸ்ரெப்சில்ஸ் சுவைக்கவும் செய்து விட்டார். இலண்டன் வந்ததும் எனது மருமகன் வைத்திய கலாநிதி இதனை முயற்சி செய்து பாருங்கள் மாமா என்றார். அவர் தந்தது "Fisherman's Friend" என அழைக்கப்படும் மென்தோல் மாத்திரை. சற்று வலுவானது. எனது பொக்கற்றில் வைத்தபடி ஹீத்துறோ விமான கூடத்திற்கு சூரிச் செல்வதற்காகச் சென்றேன். சக்கர நாற்காலி என்றால் அதிவேகமாக எல்லாத் தடையையும் தாண்டலாம். ஆனால் காபாந்து செக்கிங் தடவு தடவு என்று தடவி விடுவார்கள். பீப் என்றது. என்ன என்றனர். தொடையில் முறிவு. உலோகத்தட்டு உள்ளது என்றேன். எப்பக்கம் என்றார்கள். இடப்பக்கம் என்றேன். அப்போ என் வலப் பக்கத்தில் சத்தம் கேட்கிறது என்றார்கள். நான் அறியேன் பராபரமே என்றேன். சந்தேகம் வந்துவிட்டது போலும் உள்ளே அழைத்தனர். போனேன். நல்லகாலம் உடையைக் கழற்றுமாறு கூறவில்லை. பொக்கற்றில் உள்ளதை எல்லாம் வெளியே எடு என்றனர். எடுத்துப் போட்டேன். குற்றவாளி Fisherman's Friend எனக் கண்டு கொண்டனர். இனிமேல் இதனுடன் செல்லாதே என ஆலோசனை கூறினார்கள். விமானத்தில் இருமல் வந்தால் என்றேன். அது பற்றி எம்மைக் கேளாதே என்றனர். இவர்களுடன் எனக்கு எப்போதுமே பிரச்சனைதான். ஜேர்மனி போகும் பொழுது எனது கைப் பையில் இருந்த பிறில்கிறீம் ஜெல்லினை அபகரித்து விட்டனர்.

**தீபம் செவ்வி:** தீபம் தொலைக்காட்சி ஐரோப்பா முழுவதும் பிரபலம். இதில் செவ்வி காணும் அனாஸ் மிகவும் திறமைசாலி. செவ்வி காண்பதில் கை தேர்ந்தவர். ஒவ்வொரு முறை நான் செல்கின்ற பொழுதும் அவர் என்னைச் செவ்வி காண்பது வழக்கம். இம்முறையும் எனது திறவுகோல் நூல் பற்றியும் பெற்றோரியம் பற்றியும் அருமையான ஒரு செவ்வி நிகழ்த்தினார். நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்பட்டமையால் ஐரோப்பா எங்குமிருந்து பல நேயர்கள், எனது மாணவர்கள் உட்பட நேரடியாகப் பேசினார்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.,




"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

"Honesty, Integrity,
Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் M.A
Sales Representative
Direct: 416-284-5555
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED




Graphic Land - 647. 219. 7576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற**

**சிவா கணபதிப்பிள்ளை**

**அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

# மறதிப் பைத்திய நோயை வருமுன் கண்டுபிடிக்க...

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்.**

பிளக் ஹிந்திப் படம் பார்த்திருக்கிறீர்களா? படத்தின் இறுதிப் பகுதியில் அமிதாப் பச்சனுக்கும் வருகிறதே ஒரு நோய். தனக்கு மிக நெருக்கமான தனது நீண்ட அயராத கற்பித்தல் முயற்சியால் உருவாக்கிய பார்வையற்ற மாணவியைக் கூட இனங்காண முடியாத நோய் மறதி நோய். அண்மைக்கால சம்பவங்களை மறத்தலில் ஆரம்பித்து பின் குழப்ப நிலையை அடைந்து இறுதியில் மோசமான முடிவுகளை எடுக்க வைக்கிற நோய். இதனை படிப்படியாக ஆரம்பித்து மூளையை நலிவடையச் செய்து மீளமுடியாத நிலைக்குச் செல்கின்ற முதுமை மறதிப் பைத்தியம் எனலாம். அது தான் அல்ஸீமர் நோய்.

வயதான காலத்தில் ஏற்படும் நினைவிழப்பு மற்றும் சிந்தனைத் திறன் இழத்தல் எனவும் சொல்லலாம். இது பொதுவாக 65க்கு மேற்பட்டவர்களுக்கே வரும் நோயாயினும் இது மூளையில் ஏற்படும் நோயே அன்றி வழமையான வயது முதிர்வதால் ஏற்படுவதில்லை. அல்ஸீமர் நோயல்லாத வேறு நினைவு மங்கும் நோய்களும் உள்ளன. 'அறளை பெயர்தல்' என்ற சொல் கூட இவற்றிற்குப் பொருந்தலாம்.

இந்த நோயை வைத்தியர்கள் நோயின் வெளிப்படையான அறிகுறிகளை வைத்து, நோயாளியின் அறிவார்ந்த செயற்பாடுகளைக் கணக்கெடுதத்து, தங்களது அனுபவ அறிவைக் கொண்டு தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. எயிட்ஸ் நோய்க்கு செய்வது போலவோ, நீரிழிவுக்கு செய்வது போலவோ இரத்தப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க முடியாது. மருத்துவ நோய் நிர்ணயத்திற்கு அனுபவ அறிவைக் கொண்டு அல்லது அறிகுறிகளை மட்டும் வைத்துக் கொண்டு பிடிப்பதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. இத்துடன், நோயின் ஆரம்ப நிலையில் கண்டுபிடிப்பதும் முடியாததாகும். சீ.ரி. ஸ்கான் மற்றும் மூளை மற்றும் முண்நாணுக்குள் இருக்கும் Cerebro Spinal Fluid ஆகியவற்றை எடுத்துப் பரிசோதித்தல் போன்றவை சில காலமாக பயன்பாட்டில் இருந்த போதும் அவையும் மிகச் சரியான முடிவுகளைக் கொடுப்பதில்லை.

இப்பொழுது ஒரு எயிட்ஸீக்கு செய்வது போல எலிசா (Elisa-enzyme-linked immunoaorbent assay) பரிசோதனை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள். எப்படி இந்தப் பரிசோதனையைக் கண்டுபிடித்தார்கள்?

அல்ஸீமர் நோயுள்ள 85 பேரினதும் ஆரோக்கியமான 79 பேரினதும் குருதியை எடுத்து அதன் பாயத்தில் உள்ள புரதங்களை நுணுக்கமாக ஆராய்ந்தார்கள். முக்கியமாக இந்நோயை இனங்காணக்கூடியவை என நம்பப்பட்ட 120 புரதக் கூறுகளை ஆராய்ந்த போது அதில் 18 புரதக் கூறுகள் அல்ஸீமர் நோயாளிகளின் குருதியில் மட்டும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இப்பொழுது ஆராய்ச்சி அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தது. அதாவது இந்தப் புரதங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவருக்கு அல்ஸீமர் நோய் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான இலகுவான பரிசோதனை முறை உருவாக்கப்பட்டது. அந்தப் பரிசோதனை முறை எந்தளவு நம்பிக்கையானது? அல்ஸீமர் நோயாளர்களை 90 சதவீதம் துல்லியமாகக் கண்டுபிடிக்க முடியும் என ஆய்வு முடிவுகள் சொல்கின்றன. அதுமட்டுமல்ல மிகக் குறைந்தளவு அறிவார்ந்த செயற்பாட்டுக் குறைபாடுகள் உள்ளவர்களின் இரத்தங்களைப் பரிசோதித்த போது அல்ஸீமர் நோய் வருவதற்கு 2-5 வருடங்கள் முன்னதாகவே இப்பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது.

வெளிப்படையான அறிகுறிகள் தெரிவதற்கு முன்னரே இந்நோயைக் கண்டுபிடிப்பது மிகப்பெரிய முன்னேற்றம் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், இந்த ஆய்வு முடிவுகள் பரிசோதனை முறையைக் கண்டுபிடித்த நிறுவனம் சொல்கின்றனவாகவே இருக்கின்றன. தனிப்பட்ட ஆய்வு முடிவுகள் வரும் வரை காத்திருக்க வேண்டியது தான்.

நன்றி: தினக்குரல், கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S,M.S,F.D.SR.C.S (Eng), General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR

D.D.S.M.D,F.R.C.D (C), Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்


## DR. JANAKI ILLANGO

B.D.S. குடும்ப பல் வைத்தியர்


## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்

DR. ILLANGO & ASSOCIATES




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**





**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை


தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds



**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org